# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 6
செய்தி 11
ஏப்ரல் 2021
விலை ரூ 10/-


## இனி ஒரு விதி செய்வோம்...
## மதவெறியை வேரோடு சாய்ப்போம்!






தொழிலாளி
வர்க்கத்தின்
குரல்
சட்டமன்றத்தில் ஒலித்திட
மார்க்சிஸ்ட் கட்சிக்கு
தமிழ்நாடு
மின்ஊழியர்
மத்திய அமைப்பு
மாநில மையத்தின்
நிதி பங்களிப்பு

# தனியார்மயத்தை ஒழித்திட – பொதுத்துறையை காத்திட...
# மதவெறியை சாய்த்திட .. மின்ஊழியர்களின்
# மாநிலம் தழுவிய நிதி பங்களிப்பு











# மின்கதிர்
செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

விலை ரூ. 10/-
ஏப்ரல் 2021


**உள்ளே....**


- ★ ஆட்சி மாற்றத்தை நிகழ்த்துவோம்.
- ★ அதிகார வர்க்கம் அதிரட்டும் ஆட்சி மாற்றம் நிகழட்டும்.
- ★ திமுக, இடதுசாரி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு வாக்களிப்போம்.
- ★ அனல் மின் நிலையங்களிலுள்ள ஒப்பந்த ஊழியர்களின் கோரிக்கைகள்
- ★ 10,000 கேங்மேன் ஊழியர் குடும்பங்களில் விளக்கேற்றிய மத்திய அமைப்பு
- ★ மின்துறையில் மெகா ஊழல்
- ★ பெண்களும் தேர்தலும்
- ★ காசு கொடுத்த பின்னரே கரெண்ட்....
- ★ கணக்கீட்டு ஊழியர்களுக்கு மேலும் பணிச்சுமை
- ★ தூக்கியெறியப்பட வேண்டிய புதிய பென்ஷன் திட்டம்



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


## மின் ஊழியர்களின் வாழ்வாதாரம், மேம்பட மின்துறையை பொதுத்துறையாக பாதுகாத்திட ஆட்சி மாற்றத்தை நிகழ்த்துவோம்!

கடந்த ஐந்தாண்டுகளாக தொடர்ந்து தமிழகத்தை ஆட்சி செய்து வரும் அதிமுக அரசு தமிழக உழைப்பாளிகளை வஞ்சித்து வந்தது. அனைத்து துறை ஊழியர்களையும் போராட்டத்திற்கு தள்ளியது.

அரசு ஊழியர்கள் பணி ஓய்வு பெறும் வயதை உயர்த்தி இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறித்தது, வேலை வாய்ப்புகளை உருவாக்காமல், இருக்கின்ற வேலையை அவுட்சோர்சிங் முறைக்கு கொண்டு சென்ற அரசாகத்தான் இருந்தது.

வேளாண் சட்டங்களுக்கு எதிராக இந்திய விவசாயிகள் 115 நாட்களுக்கும் மேலாக போராடி வரும் நிலையில் அவர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பாத அதிமுக அரசு, தற்போது தேர்தல் அறிக்கையில் அறிவித்திருப்பது விவசாயிகளை ஏமாற்றும் நடவடிக்கையே!

கண் இரண்டையும் விற்று சித்திரம் வாங்கினால்
கை கொட்டி சிரிப்பாரே!

தேசத்தின் பொதுத்துறைகளை கூவிக்கூவி விற்கும் மத்திய பி.ஜே.பி அரசோடு கூட்டு சேர்ந்து மாநிலத்தின் பொதுத்துறைகளை தாரை வார்க்க மவுனமே சம்மதமாக அமைதி காத்தது.

மின்வாரியத்தை தனியாரிடம் ஒப்படைத்ததில் காட்டும் வேகம், மற்றும் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களின் பெயரை சொல்லி ஆட்சி நடத்திய அரசு ஜெயலலிதா அவர்களால் அடிக்கல் நாட்டிய மின் உற்பத்தி திட்டங்களை நிறுத்தி வைத்து தனியாரிடம் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவது மின்வாரியத்தை நஷ்டமடையச் செய்வதுடன் இலாபத்தை ஆளும் வர்க்கம் பங்கு போட்டு கொண்டது.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதை ரத்து செய்யச் சொல்லும் மத்திய அரசுக்கு ராஜ விசுவாசம் காட்ட விவசாய மின் இணைப்புகளில் மீட்டர்கள் பொருத்தப்படுவதும், அதை அளவீடு செய்யச் சொல்வதும்,இலவச மின்சாரம் ரத்து ஆகுமோ என்ற அச்சம் எழுகிறது. ஆம்! அதிலென்ன சந்தேகம் மின்சார சட்டதிருத்த மசோதா அமலானால், அரசு

இலவச மின்சாரத்தை ரத்து செய்ய நேரிடும் என்பது ஊரறிந்த ரகசியம். மின்சாரத்தை சந்தைப்பொருளாக மாற்றுவது தானே இவர்களின் நோக்கம்.

இந்திய நாடு முழுவதும் ஒரு நாடு, ஒரு மொழி என்பது போல ஒரே நாடு ! ஒரு மின்சாரம்! ஆம் அது தான் அதானி பவர் கார்ப்பரேசன் என்ற அவர்களின் அஜெண்டாவை நிறைவேற்ற பாசிச வெறிபிடித்த பிஜேபி அரசாங்கத்தின் கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு வருமான வரிக்கு பயந்து செயல்படும் அடிமை அரசு அல்லவா! இந்த அதிமுக அரசு.

தற்போது மீண்டும் அதிமுக ஆட்சி கட்டிலில் அமர இலவச வாக்குறுதிகளை அள்ளிவீசியுள்ளது. இவையெல்லாம் தமிழக உழைப்பாளி மக்கள் புரிந்து கொண்டு செயல்பட வேண்டிய சமுதாய கடமை நம்முன் உள்ளது.

எதிர்காலம் என்பது ஒரு மிகப்பெரிய கேள்விக்குறியாக தற்போது நம் கண்முன் உள்ளது. இந்த அவலநிலை மாற நமக்கு கிடைத்த ஒரு வாய்ப்பு ஏப்ரல் 6-ல் நடைபெற உள்ள தமிழக சட்டமன்றத்தின் 16வது தேர்தல்.

தமிழக உழைப்பாளி மக்களின் நலன்கள் பாதுகாத்திட போராடிப்பெற்ற உரிமைகளை பெற்றிட, பொதுத்துறைகளை சூறையாடும் நயவஞ்சகர்களின் எண்ணங்களை தவிடு பொடியாக்கிட ஜாதி, மதம், இனம், மொழி, இவற்றையெல்லாம் கடந்து சமூக ஒற்றுமையை உயர்த்தி பிடிக்கும் மின்வாரிய பணியாளர்கள் திமுக தலைமையில் இடதுசாரிகள் ஆதரவு பெற்ற மதசார்ப்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை தேர்வு செய்வோம்.

**தமிழகம் தழைத்தோங்கிட ஆட்சி மாற்றம் நிகழட்டும்..**

---

## தேர்தல் நிதி அளிப்பு




கடலூரில் 12.2.2021 அன்று மத்தியகுழு உறுப்பினர் தோழர் உ. வாசுகி அவர்களிடம் கடலூர் மின்வட்டக் கிளை சார்பில் ரூ. 2,00,000 அளிக்கப்பட்டது.




தர்மபுரிகிளை சார்பில் 26.3.2021 அன்று 2ம் கட்ட நிதியாக ரூ. 50,000/-ஐ மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் என். குணசேகரன் அவர்களிடம் அளிக்கப்பட்டது



# மத்திய அமைப்பின் ஸ்தாபக தலைவர்
# தோழர் து. ஜானகிராமன்
## 19 வது வருட நீங்காத நினைவுகள்
## 13.04.2002

மின்ஊழியர் மத்திய அமைப்பின் ஸ்தாபக தலைவர் தோழர் து.ஜானகிராமன் அவர்கள் 13.04.2002 அன்று நம்மை விட்டு பிரிந்து 19 வருடம் கடந்து விட்டது. அவரது அளப்பரியா தொழிற்சங்க பணி, அணுகுமுறை, அரவணைப்பு... தோழர்களிடம் காட்டிய பாசம் .. நேசம்.. அன்றும்.. இன்றும்.. என்றும் நமது உள்ளத்தில் நீங்கா நினைவுகளாக நிலைத்து நிற்கிறது. தமிழக மின் இயக்கத்தின் தளநாயகராக திகழ்ந்தவர் தோழர் து.ஜானகிராமன் அவர்கள்.

கிளர்ச்சிப் பிரச்சாரத்தில் கைதேர்ந்தவர் நிரந்தர தொழிலாளர்களை உறுப்பினர்களாக கொண்ட சங்கங்கள். காண்ட்ராக் பற்றி பேசக்கூடாது என்ற நிர்வாகத்தின் வர்ணாஸ்திர தர்ம நடைமுறையை மண்ணில் புதைத்து மத்திய அமைப்பை வழி நடத்தி உயர்வுக்கு கொண்டு சென்றவர். மாற்று சங்கங்களின் முன்னணியினரையும், மத்திய அமைப்பில் இணைத்து முதன்மை தலைவர்களாக்கிய பண்பும்... ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரமாக்கி அவர்கள் இன்று மத்திய அமைப்பின் தலைவர்களாக வளம் வர பல தோழர்களுக்கு தோழர் து.ஜானகிராமன் ஆணி வேர் ஆவார்.

மின்வாரியம் 1957 ஆம் ஆண்டு வாரியமாக மாற்றப்பட்ட போது அதில் பணியாற்றிய ஊழியர்கள் அப்போதைய அதிகாரிகளால் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டனர். இந்த இழி நிலையை எதிர்த்து தொழிலாளர் உரிமைகளுக்கான மின் வாரிய ஊழியர்கள் மத்தியில் எழுந்த தன்னெழுச்சியான போராட்டங்களை ஆதரித்து அவற்றை ஊக்குவித்து களம்கண்டு உரிமைகளை பெற்று தந்த தலைவர் தோழர் து.ஜானகிராமன்.

அவர் ஒரு சிறந்த அமைப்பாளர் தன் கருத்துக்களை தொழிலாளர்கள் மத்தியில் மிக மென்மையான வார்த்தைகள் மூலம் பதியச் செய்தவர். தமிழ் இலக்கணம், தமிழ் எண் கணிதம் போன்றவற்றை படித்தவர் கவிதைகள், கட்டுரைகள், எழுதுவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு தமிழை வளர்ப்பதிலும் ஆர்வம் செலுத்தியவர்.

1970 ஆம் ஆண்டில் தமிழக மின்வாரிய தொழிலாளர்கள் ஊதியம் குறித்து ஆராய ஒரு குழுவை (கமிஷன்) வாரியம் நியமித்தது. ஆனால் இந்த குழுவின் பரிந்துரை மிகவும் ஏமாற்றமளிப்பதாக இருந்தது. கூடுதல் சம்பளம் கோரி மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பு தோழர்கள் வி.பி. சிந்தன், து.ஜானகிராமன் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டம் தமிழகம் முழுவதும் பரவி வேலை நிறுத்தமாக மாறியது. இந்த வேலை நிறுத்தத்தில் பொறியாளர்களும் பங்கேற்றனர். ஊழியர்கள் விடுப்பு கொடுத்து 25 ஆயிரத்துக்கு மேல் பங்கேற்றனர். அப்போதைய கலைஞர் அரசு இரும்பு கரம் கொண்டு அடக்குவோம் என்றது இது வாரிய வரலாற்று சிறப்புமிக்க போராட்டமாகும்.

இப்படி பெரும் களம் காணும் போது உறுதிமிக்க தொழிற்சங்கத்தின் பாரம்பரிய போர்குணத்தை ஊழியர்களுக்கு புரிய வைத்து சங்கத்தின் தேவையை உணர்த்தியவர் தோழர் து.ஜானகிராமன் அவர்கள்.

தோழர் ரமணியுடன் இணைந்து தினக்கூலி தொழிலாளர்கள் நிரந்தரம் பெற பெரும் பணியாற்றினார். இதனால் 38,000 ஆயிரம் தினக்கூலி ஊழியர்கள் நிரந்தரம் பெற்றார்கள். பிற்காலத்தில் அவர்களையே மத்திய அமைப்பின் முன்னணி தலைவர்களாக மாற்றிய பெரும் பெருமை தோழர் து.ஜா. வையே சாரும்.



# அதிகார வர்க்கம் அதிரட்டும்! ஆட்சி மாற்றம் நிகழட்டும்!!

எஸ். இராஜேந்திரன்

நடைபெற உள்ள 16வது சட்டமன்ற தேர்தலில் உழைப்பாளி மக்கள் யாருக்கு வாக்கு அளிக்கப் போகிறோம் என்ற கேள்விகளோடு நாம் வாக்குகளை செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் தமிழகத்தை ஆண்ட அதிமுக அரசு மிகப்பெரிய நிதி நெருக்கடியை உருவாக்கி தமிழகத்தை ரூ.4.85/- லட்சம் கோடி கடனை தமிழக மக்கள் தலையில் சுமத்தியது தான் மிகப்பெரிய சாதனை.

தமிழத்தின் தொழில் வளர்ச்சியில் அக்கரை செலுத்தாமல் ஆண்டுக்கு இரண்டு லட்சம் பேருக்கு வேலை என்று சொன்ன அதிமுக இளைஞர்கள் வேலை வாய்ப்பையும், கனவுகளையும் சீர்குலைக்கின்ற, வகையில் அரசு ஊழியர்கள் பணி ஓய்வு பெறும் வயதை 58-ல் இருந்து 59 ஆக உயர்த்தி, தற்போது 60 ஆக உயர்த்தி விட்டார்கள்.

கொரானா தொற்றுக்காலத்தில் கூட மக்களின் வாழ்வாதாரத்தில் எவ்வித அக்கறையும் செலுத்தாத அரசாக அதிமுக அரசு இருந்து வந்தது. மத்திய பிஜே.பி. அரசின் அடிமை அரசாக இருந்தது தான் நிதர்சனம்.

அனுதினமும் உயர்ந்து வரும் பெட்ரோல், டீசல் விலை உயர்வினால் பொது மக்கள் பாதித்து வருவதை கணக்கில் கொள்ளாமலும், அதன் மூலம் அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வை தடுக்க முடியாத அரசாக அதிமுக அரசு இருந்தது.

பெட்ரோல், டீசல் மூலமாக கிடைக்கப்பெற்ற ரூபாய் ஒரு லட்சம் கோடிக்கு அதிகமான வரியை மத்திய அரசு ஈட்டிய போதிலும், மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டிய வரிப்பங்கை கேட்டுப் பெறுவதற்கும் துணிவில்லாத அரசாகவே இந்த அரசு இருந்து வந்துள்ளது. கடந்த ஆண்டு பெட்ரோல் மீதான உற்பத்தி வரி லிட்டருக்கு ரூ.19.98/- ஆக இருந்தது. ரூ.32.90/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மத்திய பிஜே.பி. அரசு எரிவாயு உருளைக்கான விலையை பலமடங்கு உயர்த்திய பொழுது அதை கண்டு கொள்ளாத அதிமுக அரசு தற்போது தேர்தல் வாக்குறுதியில் ஆண்டுக்கு 6 சிலிண்டர் இலவசமாக தருவது என்று சொல்வது வேடிக்கையானது. தேர்தல்கால வாக்குறுதிகள், மோடி ஏற்கனவே வங்கி கணக்கில் ரூ.15/-லட்சம் செலுத்தியது போலத்தான்.

தமிழக அரசுக்கு சொந்தமான அனைத்து பொதுத்துறைகளையும் தனியாரிடம் ஒப்படைப்பதற்கு அத்துணை நடவடிக்கைகளையும், அதிமுக அரசு எடுத்து வந்தது.

அரசு போக்குவரத்து துறையில் அரசு பேருந்தையே டெண்டர் எடுத்து தனியார்கள் இயக்க ஏற்பாடுகள், மின்துறையில் தனியார் மயத்தை அனுமதிக்க மாட்டோம் என கூறிக்கொண்டே கொல்லைப்புற வழியாக விநியோக பிரிவுகளில் ஒப்பந்த முறை, அவுட்சோர்சிங் முறையில் மின்வாரியத்தை தனியாரிடம் கொடுப்பதற்கான ஏற்பாட்டை செய்தது.

போக்குவரத்தில் டீசல் வாங்குவதிலும், உதிரிப்பாகங்கள் வாங்குவதிலும், பல்வேறு முறைகேடுகள். மின்வாரியத்திலோ மின்சாரத்தை அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்ததில்

மிகப்பெரிய ஊழல், நிலக்கரி கொள்முதலில் ஊழல் என மாநில மின் வாரியத்தை கடந்த 5 ஆண்டுகளில் மின்வாரிய அதிகாரிகளோடு கைகோர்த்து நிதி நெருக்கடிக்கு உள்ளாக்கி கடன் சுமையில் தள்ளிவிட்டது அதிமுக அரசு.

மத்திய பிஜேபி அரசு தமிழக மின்வாரியத்திற்கு சொந்தமான அனல் மின் நிலையங்களை சுற்றுச்சூழல் காரணம் காட்டி மூடுவிழாக் காண முயற்சித்து வருகிறது. அவ்வாறு மூடுவிழா கண்டால் தமிழகம் மின்சார தேவைக்கு தனியாரை நாட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம். இதனால் மின்சார கட்டணம் உயர்வு என்பது ஒரு புறம், மறுபுறம் மின்சாரம் சந்தைப் பொருளாக மாறும்.

அனைத்து தொழிலுக்கும் தாய்தொழிலான மின்சாரத் துறையை பொதுத்துறையாக, சேவைத்துறையாக அனைவருக்கும் மின்சாரம், மக்கள் வாங்கும் விலையில் மின்சாரம் என்ற உன்னத நோக்கத்துடன் போராடி வரும் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு அனைத்து தொழிலாளர்களிடமும், வாக்காளர்களிடமும் உங்களது வாக்குகளை மக்கள் ஒற்றுமையை பாதுகாக்கும் இடதுசாரி ஆதரவு பெற்ற வேட்பாளர்களை ஆதரிப்போம்!

ஜனநாயத்தை பாதுகாப்போம்!!



தேர்தல் நிதியாக ரூ. 2,00,000/-ஐ
கடலூர் மின்வட்டக் கிளை சார்பில்
தோழர் பிரகாஷ்காரத் அவர்களிடம் வழங்கினர்





## அதிமுக - பாஜக அணியை தோற்கடிக்க மின்வாரிய தோழர்களின் தேர்தல் பணிகள்....







# தமிழக சட்ட மன்ற தேர்தல் 2021!

## திமுக, இடதுசாரி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு வாக்களிப்பது காலத்தின் கட்டாயம்!





* தமிழக சட்டமன்ற தேர்தல் களம் முந்தையை தேர்தல்களைக் காட்டிலும் தீவிரமானது மட்டுமல்ல, மிகவும் சிந்தித்து செயல்படவேண்டிய களமுமாகும். ஆம்! பாஜகவின் பாசிச அபாயமும், அதிமுக அரசு பாஜகவுக்கு அடிமை சேவகம் செய்து அதன் மூலம் தனது அரசின் ஊழல் முறைகேடுகளிலிருந்து தப்பிக்க முயற்சிக்கும் அவலமும், அதனால் தமிழகத்தின் உரிமைகள் பறிக்கப்படுவதும், இவற்றைப்பற்றி கவலைப்படாமல் சுயநலத்தோடு சாதீய உணர்வை வெறியாக்கி தேர்தல் களத்தை மாசுபடுத்தும் பாமகவும் முழுவதுமாக முறியடிக்கப்பட வேண்டிய கட்சிகளாகும். தேர்தல் களத்தில் பல அணிகள் இருந்தாலும் அவையாவும் தமிழகத்தின் பிணிகளே? மத்திய மாநில அரசுகளின் மக்கள் விரோத போக்கை எவ்வித சமரசமுமின்றி கடந்த ஐந்து ஆண்டுகளாக ஒன்றுபட்டு தங்கள் எதிர்ப்பை போராட்டங்கள் மூலம் காட்டியதோடு, அதற்காக பலமுறை சிறையும் ஏகிய அணி திமுக, இடதுசாரிகள் அணியே ! மத்திய பாசிச பாஜக வின் பிடியிலிருக்கும் மாநில அடிமை அதிமுக அரசை அகற்ற, திமுக தலைமையிலான அணிக்கு வாக்களிப்பது காலத்தின் கட்டாயம்! குறிப்பாக மின்வாரிய ஊழியர்களின் வருங்காலம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் திமுக தலைமையிலான அணியை தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்புக்கு கொண்டுவருவது இன்றைய தேவையுமாகும்!

**ஏனெனில் எடப்பாடி பழனிச்சாமியின் அரசு**

* மத்திய அரசின் உதய் மின்திட்டத்தை ஏற்று மின்வாரியத்தை பெருங்கடன் வலையில் மூழ்க வைத்தது. இதனால் மின்வாரியத்தை 30,000 கோடி ரூபாய்க்கு கடனாளியாக்கியது மட்டுமல்ல, இரட்டிப்பு விலை கொடுத்து மின்சாரத்தை வெளியே வாங்குவதால் அடுத்த 15 வருடத்தில் ஒரு லட்சம் கோடி ரூபாயாக மின்வாரியத்தின் கடன்தொகை உயரும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. மின்வாரியத்தை கடனாளியாக்கி, அதனை மீளமுடியாத நிலைக்கு தள்ளி, தனியாருக்கு தாரை வார்ப்பதே மத்திய மாநில அரசின் நோக்கமாகும்!

தில்லியில் போராடும் விவசாயிகளிடம் நாசகரமின்சார சட்ட திருத்தங்களை திரும்பப்பெற ஒத்துக்கொண்ட மத்திய அரசு, தற்போது அதை அமுல்படுத்தி வருகிறது. இதற்கு அதிமுக அரசும்






ஒத்தூதுகிறது! இதனால் மின்வாரியம் பொதுத்துறையில் நீடிக்க இயலாது என்ற நிலையை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்படுத்தியுள்ளது?

* தமிழக அரசு அடிப்படையில் தொழிலாளர் நல விரோத அரசாகவே இருந்து வந்துள்ளது. அரசு ஊழியர், ஆசிரியர்கள் மட்டுமல்ல மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறைகளில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் தொடர்ந்து போராட்டக் களத்திலேயே உள்ளனர். போராட்டங்களை தனது அடக்குமுறை கருவிகளைக்கொண்டு அடக்கியே வந்திருக்கிறது. போக்குவரத்து ஊழியர்கள் மட்டுமல்ல, மருத்துவர்கள் தொடர்பாகவும் நீதிமன்றம் அறிவுறுத்தியும் அவற்றை அமுல்படுத்த தமிழக அரசு முன்வரவில்லை. கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக தமிழக அரசு செயல்படுவதோடு, அங்கெல்லாம் தொழிற்சங்க சட்டங்கள் அமுலாவதில்லை என்பதைப்பற்றி அக்கறை காட்டுவதே இல்லை. தொழிற்சங்க சட்டங்கள் எல்லாம் வெறும் ஏட்டிலே என்ற நிலையை ஏற்படுத்தி, தொழிலாளர்களை நிர்க்கதியாக விடுவதே அரசின் கொள்கையாகி விட்டது.

* தமிழகத்தை ரூ 5,70,000 கோடி கடன் வலையில் சிக்க வைத்து அதற்காக ஆண்டு தோறும் வட்டியாக மட்டும் ரூ 32,000கோடி கட்டும் அபாய நிலைக்கு ஆளாக்கியுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு குடிமகன் தலைமையிலும் ரூ 72,000 கடன் சுமையை ஏற்றியுள்ளது? பொதுத்துறை நிறுவனங்களின் கடன் உட்பட ஒட்டுமொத்த தமிழக அரசின் கடன் 9 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்தியது தான் தமிழக அரசின் சாதனை?

* படிப்படியாக மதுக்கடையை மூடுவோம் என்று கடந்த தேர்தலில் வாக்குறுதி கொடுத்ததை மறந்து, டாஸ்மாக் வருமானத்தை ரூ 14,000 கோடியிலிருந்து 29,000 கோடி ரூபாயாக உயர்த்தி அதாவது இரட்டிப்பாக்கி தமிழகத்தின் குடிமக்களை பெருங்குடியர்களாக்கி தாய்மார்களின் வேதனையை கூட்டியது?

* தமிழகத்தை வறட்சி வெள்ளம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்துக்காக மத்திய அரசிடம் தமிழக அரசுகோரியது 40,000 கோடி ரூ. ஆனால் மத்திய அரசு தந்ததோ வெறும் 9390 கோடி ரூ. அதை எதிர்த்து கேள்வி கேட்க கூட திராணியற்று இருந்தது தமிழக அதிமுக அடிமை அரசு?

* கொரோனா காலத்தில் இந்திய அளவில் நாடு முழுவதும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் மூடப்பட்ட நிலையில் தமிழகத்தில் மட்டும் 1322 நிறுவனங்கள் மூடப்பட்டன. இதனால் வேலையிழந்து பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்று வரை மீளவில்லை? 2020ல் தொழில் நிறுவன முதலீடுகள் 40 சதமும், நிதி நிறுவன முதலீடுகள் 37 சதமும் வீழ்ச்சியடைந்தது!

* பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற நடவடிக்கைகள் நாடு முழுவதும் 45 சதம் உயர்ந்துள்ளது. இவைகளைத்தடுக்க அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்க வைக்க பெண்கள் அமைப்புகளும் , அரசியல் கட்சிகளும் கடுமையாக போராட வேண்டி உள்ளது. பொள்ளாச்சி பாலியல் பலாத்கார நிகழ்வுகளும், காவல் துறையில் உயர் பொறுப்பில் உள்ள ஐபிஎஸ் அதிகாரிக்கே காவல்துறையிடமிருந்து பாதுகாப்பு இல்லை என்பதும் , தமிழகத்தில் பெண்கள் எந்த அளவிற்கு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது?

* மத்திய அரசின் முன்யோசனையற்ற பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் நலிவடைந்த ஆயிரக்கணக்கான நிறுவனங்கள் அதிலிருந்து மீளவே இல்லை. அதனால் ஏற்பட்ட வேலையிழப்பு கொரோனாவால் மேலும் கூடி வேலையற்றவர்களின் எண்ணிக்கையை பெருமளவு கூட்டி விட்டது. தமிழகத்தில் மட்டும் வேலைவாய்ப்பு நிலையத்தில் பதிவு

செய்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை தாண்டுகிறது என்றால் பதிவு செய்யாதோர் எண்ணிக்கை இன்னும் சில கோடியைத்தாண்டும்.

* தமிழகத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களில் தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுகிறது. வெளி மாநில இளைஞர்களைக்கொண்டு நிரப்பப்படுவதால் சொந்த மாநிலத்திலேயே தாய் மொழியில் பேசி பரிமாற்றம் செய்ய முடியாத அவலநிலை தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது! வெளி மாநிலத்தவர்களும் தமிழக அரசின் வேலை வாய்ப்புகளில் பங்கேற்கலாம் என்ற தமிழக அரசின் உத்திரவால் தமிழக மின்வாரியத்தில் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எந்த அளவிற்கு வேலை வாய்ப்பை பெற்றார்கள் என்பது தெரிந்ததே. சொந்த மாநில இளைஞர்களுக்கு வேம்பு, வேற்று மாநிலத்தவர்க்கோ விருந்து? தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் தமிழக அரசின் இலட்சணம் இதுதான்? வேலையின்மையை போக்க மத்திய மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை?

* கடந்த பத்தாண்டுகளாக ஊழல் சேற்றில் புதைந்துகிடக்கும் ஆட்சி. ஊழல் முறைகேட்டால் தண்டனைக்காளான முதலமைச்சர் மட்டுமல்ல, இன்றுள்ள அமைச்சர்கள் அத்தனை பேரும் ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகி, மத்திய அரசின் தயவால் தப்பித்துக்கொண்டிருப்பவர்கள். மத்திய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷாவால் ஊழல் அரசு என்று குற்றம் சாட்டப்பட்ட அரசுதான் தமிழக அரசு. ஆனால் இன்று வெட்கமின்றி தமிழகத்தில் எப்படியாவது காலூன்ற வேண்டு மென்பதற்காக பாஜக என்கிற ஊழல் ஊழலோடு கூட்டணி சேர்ந்துள்ளது?

* எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்ற நிலை அதிமுக அரசில் கொடி கட்டி பறக்கிறது? மத்திய மாநில அரசுகளின் திட்டங்களில் ஊழல், டெண்டர்களில் ஊழல், வேலை நியமனம், ஊர்மாறுதல் என்று அனைத்திலும் காசு பார்த்து கோடி கோடியாய் கொள்ளையடிக்கும் தமிழக அமைச்சர்களைப் போன்ற ஊழல் பேர்வழிகளை இதுவரை தமிழகம் கண்டதில்லை? தமிழக கஜானாவை கபளீகரம் செய்வதே இவர்களின் அன்றாட பணி! இனியும் அனுமதித்தால் தமிழகமே திவாலாகிவிடும்?

* வேளாண் சட்டங்கள், கல்வியில் நீட் தேர்வு போன்றவற்றில் மாநில உரிமை பறிக்கப்படுவதற்கு எதிராக ஏதும் செய்யாமல் கைகட்டி வாய் பொத்தி மாநில அரசு நிற்கிறது? தமிழ் மொழிக்கெதிராகவும், தமிழர் தம் பழம்பெருமைகளையும், நாகரீகத்தையும் தெரிந்து கொள்ள உதவும் அகழ்வாராய்ச்சிக்கு போதிய நிதி ஒதுக்க மத்திய அரசு மறுக்கிறது. மாநில அரசோ அதை எதிர்க்க முடியாமல் பேசா மடந்தையாய் நிற்கிறது?

* தமிழகத்தின் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் அனைத்து மத்திய அரசின் திட்டங்களையும் ஏற்று மக்களின் எதிர்ப்பையும் மீறி அமுல்படுத்த முனைகிறது. சேலம் சென்னை எட்டுவழிச்சாலை திட்டம், மீத்தேன் வாயு எடுக்கும் திட்டம், எரிவாயு குழாய் அமைக்கும் திட்டம், ஹைட்ரோ கார்பன் திட்டம் என பலவும் தமிழகத்தின் சுற்றுப்புற சூழலை கடுமையாக பாதிப்பு ஏற்படுத்துவதோடு, விவசாயிகளின் உயிர்நாடியாக உள்ள நிலங்களை பறித்து, அவர்களின் வாழ் வாதாரங்களை அழிக்கும் திட்டங்களாகும்! தமிழக அரசின் மெத்தன போக்கால் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை பலரை பலி கொடுத்த பின்னரே மூட முடிந்தது என்பதை மறக்க முடியாது?

## மத்திய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்க்காமல் வேடிக்கை பார்த்து அடிமை ஊழியம் செய்த அதிமுக அரசு !

* கடந்த ஓராண்டில் மட்டும் பெட்ரோல் டீசல் விலை வரலாறு காணாத உயர்வு. பெட்ரோல் விலை ஓராண்டில் ரூ 21 ஏற்றப்பட்டது. சமையல் எரிவாயு கடந்த



ஒரு மாதத்தில் மட்டும் ரூ 100 உயர்ந்து சிலிண்டர் விலை 860 க்கு மேல் உயர்ந்தது? கொடுத்த மானியத்தையும் அறிவிப்பு இல்லாமலேயே மத்திய அரசு நிறுத்திவிட்டது? பெட்ரோல்,டீசல்,எரிவாயு விலையேற்றம் மூலம் மட்டும் மக்களிடம் கொள்ளையடித்து, மத்திய அரசு சுரண்டிய வருமானம் 3 லட்சம் கோடி ரூபாய் ஆகும்?

* மோடி அரசு கடந்த ஏழாண்டுகளில் தான் கார்ப்பரேட் முதலாளிகளுக்கான அரசே தவிர பாமர மக்களுக்கான அரசு அல்ல என்பதை தொடர்ந்து உறுதிப்படுத்தி வருகிறது. வங்கி கடன் தள்ளுபடி, மானிய உதவி, வரி குறைப்பு என்ற பெயரால் பல லட்சம் கோடி ரூபாயை பெரு முதலாளிகளுக்கு வாரி வழங்கியது. தற்போது முதலாளிகளுக்கு விதிக்கப்பட்ட 30 சத வரியை 22 சதமாக குறைத்ததன் மூலம், ரூ 400 கோடி வர்த்தகம் செய்யும் பெரு முதலாளிகளுக்கு 1.45 லட்சம் கோடி ரூபாயை அள்ளி இறைத்தது. பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்ட கொரொனா காலத்தில் 90 சத இந்தியர்களின் பொருளாதார நிலை பூஜ்யத்திற்கும் கீழே போன நிலையில், மோடியின் நண்பர் அதானியின் சொத்து மதிப்பு 1.18லட்சம் கோடி ரூ அளவுக்கு கூடியது. அம்பானியே கூட 58 ஆயிரம் கோடி ரூபாய்க்குத்தான் சொத்து வளர்ச்சி காண முடிந்தது. இனி இந்தியாவை கார்ப்பரேட்டுகளுக்கு பங்கு போட்டு கொடுப்பதுதான் மிச்சம் உள்ளது ?

* கடந்த நான்கு மாதங்களாக உலமே வியக்கும் வகையில் தலைநகர் தில்லியில் அ'ஹிம்சா வழியில் இந்திய விவசாயிகள், கொட்டும் பனியிலும், வெயில் என்றும் மழை என்றும் பாராமல் வெட்டவெளியில் போராடி வருகிறார்கள்! மோடி அரசு தான் தோன்றித்தனமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதமின்றி நிறைவேற்றிய வேளாண் சட்டங்களை ரத்து செய்ய கோரியே போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால் கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான அந்த சட்டத்தை ரத்து செய்ய மூர்க்கத்துடன் மோடி அரசு மறுப்பது மட்டுமல்ல, போராடுகிற விவசாயிகளை பணியவைக்க தன்னிடமுள்ள ராணுவம்,காவல்துறை உட்பட அனைத்து சக்திகளையும் பயன்படுத்தி மிரட்டி வருகிறது. உலகம் முழுவதும், உள்நாட்டிலும் கடும் கண்டனத்திற்கு ஆளானாலும் மோடி அரசுக்கு இருக்கும் முதலாளித்துவ பக்தி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்க மறுக்கிறது?

* மோடியின் நெருங்கிய நண்பர் அதானி விவசாயிகளிடமிருந்து பாசுமதி அரசியை ரூ18 முதல் ரூ30 க்கு வாங்கி தன்னுடைய பார்சூன் கம்பெனி மூலம் ரூ208க்கு விற்பார்? விவசாயிகளிடமிருந்து ஒரு கிலொ காப்பிகொட்டையை 120 முதல் 130 ரூக்கு வாங்கும் நெஸ்லே நிறுவனம், அதை இரண்டரை கிலோ மூலம் ஒரு கிலோ இன்ஸ்டன் தூளாக்கி 3000ரூக்கு விற்கிறது. இப்படிப்பட்ட பெருமுதலாளிகளின் கொள்ளையை தடுத்து நிறுத்த குறைந்த பட்ச ஆதார விலையை சட்டப்படி அரசு நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையை நிர்த்தாட்சண்யமாக மோடி அரசு ஏற்க மறுக்கிறது.?

* தொழில் நடத்துவது அரசின் பொறுப்பு அல்ல என்று கூறிக்கொண்டு மக்களின் சொத்தான பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு விற்க இலக்கு நிர்ணயித்து விற்க முயற்சிக்கிறது. இந்த ஆண்டு இலக்கு மட்டும் 2.10 லட்சம் கோடி ரூபாயாம்? பொதுத்துறை கடந்த ஆண்டில் ஈட்டிய நிகர லாபம் ரூ 1.61 லட்சம் கோடி! அதில் மத்திய அரசுக்கு ரூ77,000 கோடி டிவிடெண்டாகவே கொடுத்திருக்கிறது. இப்படி பொன் முட்டையிடும் வாத்தை பலி கொடுக்க மோடி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.!

* 44 தொழிலாளர் நல சட்டங்களை குறைக்கிறேன் என்ற பெயரால், நான்கு சட்ட தொகுப்புகளாக்கி, தொழிலாளர் நலனுக்கு விரோதமாக நாடாளுமன்றத்தில் தன்னிடமுள்ள பெரும்பான்மையை பயன்படுத்தி நிறைவேற்றிக்கொண்டது. இதற்கு எதிராக தொழிலாளி வர்க்கம் கடுமையாக போராடி வருகிறது!

* மதவாதத்தை விசிறி அதன் மூலம் தன் மூல அமைப்பான சங் பரிவாரின் இந்துத்துவ கொள்கையை அமுல்படுத்தும் வகையில் இந்திய குடியேற்ற சட்டம், முத்தலாக் ரத்து போன்ற சட்டங்களை சிறுபான்மை யினருக்கு எதிராக கொண்டுவந்து மோடி அரசு நிறைவேற்றிய போது அதற்கு அடிமை அதிமுக அரசு ஆதரவு தெரிவித்தது. தற்போது சிறுபான்மையரின் வாக்குகளை வாங்கு வதற்காக குடியேற்ற திருத்த சட்டத்தை ரத்து செய்ய கோருவோம் என்று அதிமுக தன் தேர்தல் அறிக்கையில் கூறுவது கடைந்தெடுத்த பித்தலாட்டம்?

* கொரோனாவால் லாக்டவுன் அறிவிக்கப்பட்ட காலத்தில் இடம்பெயர்ந்த வேற்று மாநில தொழிலாளர்களுக்கு, வாகன வசதியோ, பண உதவியோ அல்லது உயிர் வாழவோ எந்த உதவியும் செய்யவில்லை மோடி அரசு! அதனால் இரு நூறுக்கும் மேற்பட்டவர்கள்

உயிரிழந்த போதும் கூட அவர்களுக்கு எந்த நிவாரணமும் அளிக்க மத்திய அரசு முன்வரவில்லை? அதே போன்று பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த குடும்பங்களுக்கும் எந்த உதவியும் மத்திய அரசு செய்யவில்லை. ஆனால் இது குறித்து ஒரு சிறிய எதிர்ப்பைக்கூட பதிவு செய்ய அடிமை அதிமுக அரசு தயாராக இல்லை?

* தங்களின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்ப்பவர்களுக்கு எதிராக மத்திய மாநில அரசுகள் தேச துரோக வழக்கு தொடுக்கிறது, கைது செய்து காராகிருகத்தில் அடைக்கிறது. தீவிரவாதிகள், நகர்ப்புற நக்சல்கள், மாவோயிஸ்டுகள் என்று முத்திரை குத்தி தனது நடவடிக்கையை நியாயப்படுத்த முனைகிறது! மொத்தத்தில் கருத்து சுதந்திரத்தை நசுக்குகிறது. இது குறித்து சர்வதேச அமைப்புகள் கண்டனம் தெரிவித்தாலும் பின்வாங்க மறுத்து தனது பாசிச அணுகுமுறையை தீவிரப்படுத்துகிறது.


* ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாசாரம் என்ற ஆர்எஸ்எஸ்சின் கோட்பாட்டை அமுலாக்கிட மோடி அரசு அனைத்தையும் செய்கிறது. வரலாறு, கல்வி, மத பண்பாட்டு அமைப்புகள் அனைத்திலும் ஊடுருவி காவி மயமாக்க திட்டமிடுவதோடு, இந்தியை அனைத்து நிலையிலும் திணிக்க மோடி அரசு முயற்சிக்கிறது. நடைமுறையில் இல்லாத சமஸ்கிருத வளர்ச்சிக்கு அள்ளி நிதி ஒதுக்கும் மோடி அரசு, செம்மொழி தமிழுக்கு கிள்ளியே போடுகிறது. இந்த நிலையில் மோடி தமிழ் இலக்கியங்களையும், தமிழையும் உயர்த்தி பேசுவது கபடத்தனமானது! இது குறித்து ஒரு சிறு முணுமுணுப்பைக்கூட செய்யாமல் மவுனம் காக்கும் தமிழக அரசின் துரோகத்தை என்னவென்று சொல்வது?



* கடந்த 2016ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலிலேயை கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத எடப்பாடி அரசு, பொறுப்பில் இருக்கும் போது சட்டமன்றத்தில் ஏற்றுக்கொண்ட, ஒத்துக்கொண்ட பல வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வராத அரசு, இப்போது தேர்தல் அறிக்கையில் தமிழக மக்களுக்கு லாலிபாப் கொடுத்து ஏமாற்ற முயற்சிக்கிறது. "கூரையேறி கோழி பிடிக்க முடியாதவர்கள் வானத்தைக்கீறி வைகுந்தம் காட்டுவேன் என்கிறார்கள்?"


* எடப்பாடி அரசு மக்களை ஏமாற்றிய அரசு, மக்களின் நம்பிக்கையை இழந்த அரசு, தமிழக, தமிழர்களின் நலனுக்கு எதிரான அரசு? எனவே நீங்கள் மறக்காமல் உங்கள் வாக்குகளை உங்கள் தொகுதியில் போட்டியிடும் திமுக,இடதுசார அணிகளின் கீழ்க்கண்ட சின்னங்களுக்கு மறவாமல் வாக்களித்து தமிழகத்தை காப்பாற்ற முன்வாருங்கள்!

**- வெ. மன்னார்**

## வாக்களிக்க வேண்டிய வெற்றி சின்னங்கள்









# ஏப்ரல் 14
# டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
# பிறந்த நாள்

அண்ணல் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 131 வது பிறந்த தினத்தில் நமது தேசம் மீண்டும் புதுபரிணாமம் நோக்கி புறப்பட வேண்டிய காலத்தில் இருக்கிறோம்.

சாதி தான் சமூகம் என்றால் வீசும் காற்றில் விசம் பரவட்டும் என்றார், அம்பேத்கர். இந்தியா போன்ற ஓர் நாட்டின் வரலாற்றினையும் அதன் சமூகத்தினுள் இருக்கும் உறவுச் சிக்கல்களையும் கருத்து பரிமாற்றங்களையும் சாதி இல்லாமல் பார்ப்பது வெகுகடினம். பெரும்பாலும் ஒரு நாட்டின் வரலாறும் சித்தாந்தங்களும் யாருடைய கை ஓங்கி இருக்கின்றதோ அவர்களாலேயே வடிவமைக்கப்படுகின்றது. அம்பேத்கருடைய குரல் அவரவர் துவங்கிய பத்திரிகையின் பெயர் ஊமைகளின் குரல் என்ற பெயரை பிரகடனப்படுத்தி அம்மக்களின் குரலாய் ஒலித்தது.

அந்த குரல் தான் வட்டமேசை மாநாட்டில் அவரை ஊமைகளின் பிரதிநிதியாகப் பேச வைத்தது. அவருடைய குரலை வெறும் வலிகள் உணர்ச்சிகளின் பதிவாக நம்மால் ஒரு நாளும் ஒதுக்கி விட முடியாது.

இந்தியாவில் அரசியலமைப்புச் சட்டத்தினை வடிவமைத்து பன்முகத்தன்மை நிறைந்த ஒரு நாட்டில் அனைத்து மக்களின் உரிமைகளும் கண்ணியத்துடன் வாழ வேண்டும் என்பது மட்டும் அல்லாமல் மத்திய அரசின் உரிமைகள் மாநில அரசின் உரிமைகள் நிர்வாகத்துறை ஆற்ற வேண்டிய கடமைகள் என்று மிகவும் விரிவாக எழுதப்பட்டஒன்றாகத் திகழ்கின்றது. இந்திய அரசியல் அமைப்பு சட்டம் வாக்குரிமை என்பது அனைவருக்கும் பொதுவாக அளிக்கப்பட வேண்டும் என்பதில் ஒரு நாட்டின் குடியரசுத் தன்மை காக்கப்படுகின்றது என்று உறுதியாக நம்பினார். விளிம்பு நிலை மக்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதனை முதலில் அனைவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அப்படி அளிப்பதுதான் அவர்களுடைய குரல்களும் கேட்பதற்கு வழிவகுக்கும் என்பதில் அம்பேத்கர் திடமாக இருந்தார்.

இந்தியாவின் அரசியல் சுதந்திரம் மற்றும் பொருளாதாரச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு அடிப்படையாகவும் அவசியமானதாகவும் இருப்பது சமூக விடுதலை தான் என்று ஆணித்தரமாக உரைத்தார், அம்பேத்கர்.

இதோ இந்தத் தெருவில் உள்ள விளக்கு கம்பத்தில் என்னை தூக்கிலிடலாம் எனது மக்களின் நியாயமான சட்டப்படியான நலன்களை பாதுகாக்கும் எனது புனிதமான கடமைக்கு ஒரு போதும் துரோகம் இழக்க மாட்டேன் என்று உங்களுக்கு கூறுகிறேன் என்கிறார். எவ்வளவு வருந்தத்தக்க சூழ்நிலையில் இருந்து வந்தாலும் கடினமான உழைப்பும் அர்ப்பணிப்பும் தன்னை சுற்றி உள்ள மக்களின் வலிகளை தன் வலி என்று உணர்ந்து செயல்படும் ஒருவரை உலக உச்சாணிக் கொம்பில் வைத்தும் போற்றும் புகழும் என்பதற்கு அம்பேத்கரின் அரும் அர்ப்பணிப்பே பெரும் சான்றாகும்.

அவ்வகையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களும் இன்று மக்களுக்காக பாடுபடும் அனைவருக்குமான சின்னமாக உயர்ந்து நிற்கிறார்.



# அனல் மின் நிலையங்களிலுள்ள ஒப்பந்த ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கை!

தி. ஜெய்சங்கர்

மின்வாரியத்திலுள்ள அனல் மின் நிலையங்களில் பல்லாயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்கள் பணி புரிந்து வருகின்றார்கள். ஒப்பந்த ஊழியர்கள் இல்லையென்றால் அனல் மின் நிலையங்கள் இயங்காது என்ற நிலையிருந்தும், அவர்களுக்கான குறைந்தபட்ச கூலி, அடையாள அட்டை, வருங்கால வைப்பு நிதி போன்ற சட்டசலுகைகளை வழங்குவதற்கு மின்வாரிய நிர்வாகம் தயாராக இல்லை. இது தொடர்பாக நாம் தொடர்ச்சியாக கோரிக்கை வைத்தும், பேச்சுவார்த்தை நடத்தியும், பல்வேறு போராட்டங்கள் செய்தும் இதற்கான தீர்வு இன்று வரை காணப்படவில்லை. 2020-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் குடும்பத்துடன் குடியேறும் போராட்டம் செய்ய தயார் நிலையில் இருந்த போது கொரானா பெருந்தொற்று நோய் வந்த காரணத்தினால் தமிழக அரசு முழு ஊரடங்கை அமல்படுத்தியதால் நாம் இயக்கத்தை கொண்டு போக முடியவில்லை. 2021 -ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் முடிந்ததும் நாம் மீண்டும் ஒரு வலுவான போராட்டத்தை செய்திட உள்ளோம். தோழர்களே! தயாராக இருங்கள்.

அனல் மின் நிலைய ஒப்பந்த ஊழியர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி 12000 ஒப்பந்த ஊழியர்களின் வாழ்க்கையில் வெளிச்சம் கண்டது மின் ஊழியர் மத்திய அமைப்பு. அதே போல தற்பொழுது 22 ஆண்டுகள் கடந்த பிறகும் அனல் மின்நிலைய ஒப்பந்த ஊழியர்களின் பணி நிரந்தரம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படாமலேயே ஆண்டுகள் கடந்து வந்ததை நாம் கவலையோடு பார்க்கின்றோம். ஒப்பந்த ஊழியர்களை ஒருங்கிணைப்பதில் உள்ள தேக்க நிலையை உடைத்து முன்னேற வேண்டியுள்ளது. தமிழக அரசை, மின்வாரிய நிர்வாகத்தை எதிர்த்து போராடி வெற்றி காண்பதற்கு நமக்கு வலிமையான ஆயுதம் தேவைப்படுகிறது. அந்த ஆயுதம் வேறெதுவும் இல்லை ஒற்றுமை தான். ஒற்றுமையை வலுவாக கட்டினால் போராட்டங்கள் வலுவாக நடத்திட முடியும். போராட்டங்கள் தற்போதைய கால சூழலில் ஒரு நாள், இரண்டு நாள் நடத்தினால் அரசும், நிர்வாகமும் அசைவதாக தெரிவதில்லை. எனவே போராட்டங்கள் தொடர் போராட்டமாகவும் குடும்ப உறுப்பினர்களை இணைத்து நடத்துகின்ற போராட்டமாகவும், அரசாங்கத்தின் காதுகளுக்கு ஓங்கி ஒலிக்கின்ற போராட்டமாகவும் நடத்தி காட்டினால் அதற்கு தீர்வு கண்டிட வழி உண்டு. அந்த தீர்வை நோக்கி நாம் பயணிக்க வேண்டிய கட்டாயமும் தேவையும் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

முதலாளித்துவ அமைப்பில் ஆட்சி நடத்துகின்ற ஆட்சியாளர்கள் ஏழை, எளிய மக்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. அவர்களுடைய கல்வி, வேலை. சமூக அமைப்பு, வறுமை போன்ற அடிப்படை விஷயங்களை கவனத்தில் கொண்டு மாற்றியமைக்க வேண்டிய அரசுகள், அதைப்பற்றி கவலைப்படாமல் அவர்களை வாக்கு வங்கியாகவே பயன்படுத்தி வருகின்றனர். வாக்கை அளிப்பவர்களுக்கும், வாக்கை பெறுபவர்களுக்கும் உள்ள இடைவெளிதான் வறுமையின்

அடையாளமாக கல்லாமையின் அடையாளமாக, இல்லாமையின் அடையாளமாக உள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல் வரும் போது மட்டுமே மக்களின் குறைகளை கேட்பவர்களாக, வாக்குறுதிகளை அளிப்பவர்களாக ஆட்சியாளர்கள் உள்ளனர். ஆட்சி கட்டிலில் அமர்ந்த பிறகு மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிவிடுகிறது. முதலாளித்துவத்தின் உண்மையான குணமே இது தான். இது சாமான்ய மக்களுக்கு புரிவதில்லை. அவர்கள் தவறு செய்பவர்களை தட்டிக்கேட்டும் மனவலிமை இல்லாதவர்களாக உள்ளனர்.

எனவே தான் முதலாளித்துவத்திற்கு மாற்றாக முற்போக்கு கொள்கை கொண்ட தொழிலாளி வர்க்கத்தின் தலைவர்கள் ஆட்சி கட்டிலில் அமர வேண்டுமென்று சிஐடியு தனது கொள்கையாக வைத்துக் கொண்டுள்ளது. ஏற்கனவே உள்ள முதலாளித்துவ கோட்பாட்டில் ஏழைகள் ஏற்றம் பெறவில்லை, பிற்படுத்தப்பட்ட மக்கள் பின்னோக்கி சென்று உள்ளனர். ஜாதிய கட்டமைப்பு ஒற்றுமையை சிதைக்கின்றது. இந்த நிலையில் முதலாளித்துவம் பாஜக மோடி ஆட்சியில் கார்ப்பரேட் முதலாளித்துவத்தை நோக்கிச் செல்கிறது. இவர்களை தட்டிக்கேட்கும் வலிமையும்,வல்லமையும் நமக்குண்டு என்பதை மக்களுக்கு சொல்ல வேண்டும்.

கார்ப்பரேட் முதலாளித்துவம் பொது மக்கள் பணத்தை அள்ளி கார்ப்பரேட்டுகளுக்கு தாரை வார்க்கும். வங்கி கடன் , வட்டி தள்ளுபடி, வரிச்சலுகை, கடன் தள்ளுபடி, என்ற பலவகையான பெயரில் ஏழை மக்களின் ஒட்டு மொத்த சேமிப்பையும், வாரிக்கொடுப்பது தான் கார்ப்பரேட் முதலாளித்துவம். அதனால் தான் பொதுத்துறைகளை தனியார்மயம் ஆக்க வேண்டும், பொதுத்துறை சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு விற்க வேண்டுமென்று மோடி அரசு துடியாய் துடிக்கிறது. முதலாளித்துவ மத்திய, மாநில அரசுகளின் செயல்பாட்டால் எதிர்காலத்தில் நாம் இழக்கப்போவது ஏராளம் என்பதை தொழிலாளி வர்க்கம் உணராத காரணத்தினால் நாம் உணர்வற்றவர்களாக இருக்கின்றோம்.

அனல்மின் நிலைய ஒப்பந்த தொழிலாளர்கள் மட்டுமல்ல அனைத்து பகுதி ஒப்பந்த தொழி லாளர்களும், வேலை இல்லா இளைர்களும் படித்து வேலை வாய்பற்ற இளைஞர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு ஒரே தீர்வு ஒன்று பட்டு, ஒற்றுமைகட்டி ,முதலாளித்துவத்தின் ஆபத்தை உணர்ந்து வலுவான போராட்டத்தைச் செய்திட வேண்டும். இதை தவிர தொழிலாளர்களுக்கான மந்திரச்சொல் ஏதுமில்லை. போராட்டங்கள் இல்லாமல் போராடிப்பெற்ற சலுகைகளையும் தக்க வைக்க முடியாது, புதிய சலுகைகளையும் பெற இயலாது. முதலாளித்துவம் லாபத்தில் கொழுத்தது. லாபம் மட்டுமே அதற்கு குறிக்கோள். பசி, பஞ்சம், வறுமை,ஏழ்மை, இல்லாமை பற்றி எல்லாம் முதலாளித்துவம் கவலைப்படாது. கவலைப் படுபவர்கள், சமூக ஆர்வலர்கள், தொழிற் சங்கவாதிகள்., இடதுசாரிகள் மற்றும் பொதுவுடமை சிந்தனை கொண்டவர்கள். மக்களின் குணம் அறிந்து அவர்களின் அடிப்படை தேவைகளை நிறை வேற்றுபவர்கள் இவர்கள். 93சத முறைசாரா ஊழியர்கள் வறுமையில் இருக்க வெறும் 3சதமான மேட்டுக்குடி மக்களுக்காக ஆட்சி நடத்துக்கின்ற அரசு களை மாற்றுவது தான் இன்றைய முக்கிய கடமையாக கொள்ள வேண்டும். பொதுத்துறைகளை அம்பானிக்கும், அதானிக்கும் கொடுப்பதே கொள்கையாக கொண்ட பாஜக ஆட்சியை மட்டுமல்ல அப்படிப்பட்ட முதலாளித்துவ கொள்கையை யார் கொண்டு வந்தாலும் நாம் உறுதியாக எதிர்க்க வேண்டும். அப்போது தான் சாமான்ய மக்களை பாதுகாக்க முடியும்.

ஒற்றுமையை கட்டுவோம்!
போராடுவோம்!!
வெற்றி பெறுவோம்!!!



விருதுநகர் திட்டத் தலைவர்
தோழர் கே. சௌந்திரபாண்டியன், முகவர் முதல் நிலை அவர்கள்
சிறப்பு நிலை முகவர் பதவி உயர்வில் பணியேற்பு செய்ததை முன்னிட்டு நிர்மல் பள்ளிக்கு ரூ. 1000/-ம்
மின்கதிர் வளர்ச்சி நிதியாக
ரூ. 500/-ம் அளித்தார். வாழ்த்துக்கள்

# 10,000 கேங்மேன் ஊழியர் குடும்பங்களில்! விளக்கேற்றிய மின் ஊழியர் மத்திய அமைப்பு!!



மின் வாரியத்தில் ஆரம்ப நிலை பதவிகளில் 40,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ளதை கணக்கில் கொண்டு, நமது போராட்டங்களில் வடிவமைக்கப்பட்ட கோரிக் கைகளில் பிரதானமான கோரிக்கையாக களஉதவி யாளர், தொழில்நுட்ப உதவியாளர், உதவிப் பொறியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் கணக்கீட்டாளர் பணி இடங்களை நிரப்பிட வேண்டும் என்பது பிரதானமாக இருந்தது. அந்த அடிப்படையில் தான் மத்திய அமைப்பில் அனைத்து தரப்பு ஊழியர்களும் உறுப்பினராகி சங்கத்தை பலப்படுத்த மின்வாரியத்தில் முதன்மையான சங்கமாக விளங்கி வருகிறது. 2020 டிசம்பர் மாதம் மின்வாரிய தலைவர் தொழிற்சங்கங்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்த பொழுது உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப் படையில் முதன்மையாக உள்ள தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பையே முதலாவதாக மின்வாரியம் அழைத்தது என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

அதே நேரம் மின்வாரியத்திற்கு வெளியே உள்ள மின்வாரிய பணிக்கு வர ஆசைப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கும் தெளிவாக தெரிந்துள்ளது, மின்வாரியத்தில் முதன்மைச் சங்கமும், நேர்மையான சங்கமும் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு என்று. அதனால் தான் கேங்மேன் பணிக்கு தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி ஆணை கிடைத்திட கால தாமதம் ஆகின்ற சூழலில் எங்களது சகோதர அமைப்பான ஜனநாயக வாலிபர் சங்கத்தையும், மின் ஊழியர் மத்திய அமைப்பையும் நாடி வந்தனர். ஜனநாயக வாலிபர் சங்கம் இதற்கான இரண்டு கட்ட போராட்டங்களை செய்தது. தமிழகம் முழுவதுமுள்ள கேங்மேன் பணியாளர்கள் ஒன்றிணைந்து மின் ஊழியர் மத்திய அமைப்பை நாடி பணி ஆணை கிடைத்திட ஆவண செய்திட வேண்டுமென கேட்டுக்கொண்டது. கேங்மேன் தேர்வர்களோடு பலமுறை நடந்த பேச்சுவார்த்தையின் இறுதியாக சங்கத்தின் நிர்வாகக்குழுவில் முடிவெடுத்து இதற்கான சுமூகமான சூழல் ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தோம்.

அதன் அடிப்படையில் தான் நீதிமன்றத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் வழக்கறிஞர் திரு. என்.ஜி.ஆர். பிரசாத் அவர்கள் வாதிட்டு பணி நியமனம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டது. அதே நேரம் ஒப்பந்த தொழிலாளர்களின் பணி நிலையில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்ற பாதுகாப்பு அரண் உருவாக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் 10,000 கேங்மேன் பணியாளர்கள் நியமனத்திற்கு முதன்மை காரணமாகவும், முக்கிய காரணமாகவும், தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு மட்டுமே இருந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. கேங்மேன் பணி நியமனம் பெற்றவர்கள் பலர் வாட்ஸ் ஆப், வீடியோவில் பதிவிட்டதன் மூலம் பலர் வாட்ஸ் ஆப்பில்

செய்திகளை பதிவிடுவதன் மூலம் மத்திய அமைப்பின் பணி எத்தகையது என்று அனைவரும் அறிய முடியும். இதை யாராலும் திரை போட்டு மூட முடியாது.

இந்த நிலையில் தொழிலாளர் ஐக்கிய சங்கம், மத்திய அமைப்பு, தொமுச உட்பட பல சங்கங்களை தவறாக விமர்சித்து ஐக்கிய சங்கம் மட்டுமே இதற்காக பாடுபட்டது என்ற பொய்யான பிதற்றல் வார்த்தை களை துண்டு பிரசுரம் மூலம் வெளியிட்டுள்ளது. அந்த துண்டு பிரசுரத்தின் சாராம்சம் என்பது அவர்களின் சங்க நடவடிக்கைக்கும், செயலுக்கும் தொடர்பே இல்லாதது. இவர்களுடைய நடவடிக்கை என்பது தமிழகத்தின் சில இடங்களில் ஆள்பிடிக்கும் நடவடிக்கையாக மாறி உள்ளதை நாம் காண முடிகிறது. மின்வாரியம் என்ற பொதுத்துறையில் தொழிற்சங்க ஒற்றுமை கட்டி, தொழிலாளர்களிடையே ஒரு இணக்கத்தை ஏற்படுத்தி நமக்கு வரும் பாதிப்புகளை தடுத்து நிறுத்துவதற்கு தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு அரணாக விளங்கும் என்பதில் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது. அந்த நம்பிக்கையில் தான் மத்திய அமைப்பிற்கு சில கோரிக்கைகளில் உடன்பாடு இல்லாத போதும் ஒற்றுமைக்கு முக்கியத்துவம் அளித்து தலைமை தாங்கி வருகின்றோம். இந்த ஒற்றுமையில் விரிசல் ஏற்படுத்தவே ஐக்கிய சங்கத்தின் நோட்டீஸ் அமைந்துள்ளது என்பதை நாம் கருத வேண்டியுள்ளது.

தொழிலாளி வர்க்கத்தின் மூலதனமே வேற்றுமையில் ஒற்றுமை தான். அந்த ஒற்றுமைக்கு களங்கம் ஏற்படுத்துபவர்கள் ஊறு விளைவிப்பவர்கள், மின்வாரிய தொழிலாளிகள்மத்தியில்அம்பலப்படுவதை யாராலும் தடுக்க முடியாது. காலம் அதை தீர்மானிக்கும்.

தொழிற்சங்க அங்கீகார சட்டத்தில் மாற்றங்களை கொண்டு வந்து நடைமுறைக்கு கொண்டுவர துடிக்கிறது மத்திய அரசு. அந்த சட்டங்கள் நடைமுறைக்கு வந்து மின்வாரியத்தில் அங்கீகார தேர்தல் நடைபெறுகின்ற போது அதிகமான வாக்குகளை பெற்று அங்கீகாரம் பெறப்போவது யார் என்பது அப்பொழுது தெரியும். கேங்மேன் பணியாளர்கள் மின்வாரியத்திற்கு உள்ளே வருவதற்கு முன்பும், வந்த பின்பும் மத்திய அமைப்பை முழுமையாக நம்பி உள்ளார்கள் என்பது அவர்கள் பெரும்பான்மையாக மத்திய அமைப்பிற்கு சந்தா கட்டியதிலிருந்து தெரிகிறது. செக்ஆப் சிஸ்டத்தில் கேங்மேன் ஊழியர்களின் அறியாமையை பயன்படுத்தி சந்தா பெறுவதற்கு மொட்டை கையெழுத்தை வாங்கியதை ரத்து செய்வது பெரிய விஷயமல்ல. மின்வாரியத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. அதாவது இங்கு ஜாதியாக திரண்டவர்கள், கேட்டகிரியாக திரண்டவர்கள், சுயநலத்திற்காக திரண்டவர்கள், நிர்வாகத்தையும், அரசாங்கத்தையும் எதிர்த்து எப்போதும் போராடியதில்லை. எப்போதும் போராடாத இவர்கள் தான் மேடையேறி கச்சேரி செய்ய வந்திருக்கிறார்கள். தன்னிச்சையாக எந்த ஒரு போராட்டத்தையும் செய்ய திராணியற்றவர்கள் தான் கேங்மேன் மத்தியில் பொய் வேடமிட்டு சுத்தி வருகிறார்கள். இந்த பொய்களை எல்லாம் மின் ஊழியர் மத்திய அமைப்பு எளிதாக வென்று முன்னேறும். பொய்யர்களின் கூடாரம் ஒவ்வொன்றாக காலியாகும். மின் வாரியத்தை பாதுகாக்கின்ற, பொதுத்துறைகளை பாதுகாக்கின்ற உன்னதமான போராட்டத்தை கடந்த 30 ஆண்டுகளாக செய்து வருபவர்கள் நாங்கள். அந்த பாதையில் தற்காலிகமாக இணைத்துக் கொண்ட சிலர் யார் என்பதை தொழிலாளர்கள் நன்கு அறிவார்கள்.

ஜாதிகளை கடந்து, மதங்களை கடந்து கேட்டகிரி வாதம், என்ற பேதங்களை கடந்து ஊழியர்கள், பொறியாளர்கள், அதிகாரிகள் மத்திய அமைப்பின் தலைமையில் எதிர்காலத்தில் இணைந்து போராடுவது என்பது தவிர்க்க முடியாதது. மத்திய பாஜக ஆட்சியால் மின் ஊழியர்களுக்கு, விவசாயிகளுக்கு, பொதுத்துறைகளுக்கு ஏற்பட போகும் ஆபத்து என்பது, பேராபத்தாக அமையஉள்ளது. அதிலிருந்து நம்மை பாதுகாக்க நடக்கவிருக்கும் இயக்கங்களில் நம்மோடு இருப்பவர் யார்? இல்லாமல் போவது யார்? தொழிலாளிகளை காட்டிக் கொடுப்பது யார்? என்று அப்போது தெரியும்? அந்தக்காலம் விரைவில் வரும், அப்படியொரு சூழல் வருகின்ற போது அவர்களை விடப்போவதுமில்லை, மன்னிக்கப் போவதுமில்லை. அப்படிப்பட்ட போராட்டத்தில் மத்திய அமைப்பின் தலைமையில் முன்னணி தலைமை பாத்திரம் வகிப்பவர்கள்,கோட்ட அளவில் வட்ட அளவில் மண்டல அளவில் **“தற்போதைய தலைவர்களோடு கேங்மேன் தொழிலாளர் களும்”** முன்னணி பாத்திரம் வகிப்பார்கள் என்பதில் எள் முனைய அளவும் சந்தேகம் இல்லை.

“2021 மாற்றத்திற்கான ஆண்டு மாற்றிக்காட்டும் ஆண்டு,
மாற்றிக்காட்டுவோம் வாருங்கள்”



# மின்துறையில் மெகா ஊழல்

தமிழகத்தை ஆளும் அதிமுக அரசாங்கம் நமது மாநில மக்களுக்கு பல தீங்குகளை இழைத்துள்ளது. அவற்றில் மிக முக்கியமானவை நிதி மேலாண்மை திறமையின்மை காரணமாக வரலாறு காணாத அளவு கடனை வாங்கியதும் கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு மையமாக இருப்பதும் ஆகும். ஊழல் குற்றச்சாட்டுகளில் இன்று மேலொங்கி முன்வந்துள்ள முக்கியமான ஒன்று மின்சார வாரியத்தில் குறிப்பாக மின் கொள்முதலில் நடைபெற்ற முறைகேடுகள் முக்கியமானவை! இந்த முறைகேடுகளை முன்வைத்துள்ளது எதிர்க்கட்சிகள் அல்ல; மாறாக சி,ஏ,ஜி எனப்படும் மத்திய அரசின் தணிக்கை ஆணையம்! இவற்றை தொகுத்து அறப்போர் இயக்கம் எனும் அமைப்பு லஞ்ச ஒழிப்புத் துறைக்கு புகாராக தந்துள்ளது. இதற்கு முன்பாகவே மின்வாரிய தொழிற்சங்கங்கள் குறிப்பாக சிஐடியு மின் கொள்முதலில் உள்ள முறைகேடுகளை தொடர்ந்து வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது. சிஐடியுவின் குற்றச்சாட்டுகள் உண்மை என்பதை நிரூபிக்கும் வகையில் இப்பொழுது தணிக்கை ஆணையம் மின் ஊழலை மிகவலுவாக வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. தணிக்கை ஆணையத்தின் அறிக்கையை மாநில அரசாங்கம் சட்டமன்றத்தில் விவாதத்துக்கு முன்வைக்க வேண்டும். ஆனால் எடப்பாடி அரசாங்கம் அதனை செய்யவில்லை. அதில் ஆச்சரியம் இல்லை. இந்த ஊழலுக்கு அடித்தளம் நவீன தாராளமயக் கொள்கைகளும் அதன் விளைவாக உருவான தனியார்மயமும் தான். முற்றிலும் அரசுத்துறையில் இருந்த மின்சார உற்பத்தியை 2003 ஆம் ஆண்டு மின்சார சட்டத்தை வாஜ்பாய் அரசாங்கம் திருத்தியதன் மூலம் தனியார் நுழைந்தனர். தாம் தயாரிக்கும் மின்சார உற்பத்தியை விற்க வேண்டிய அவசியம் தனியாருக்கு உருவானது. எனவே அவர்கள் மின்வாரியங்களை வளைத்து எவ்வித முறைகேடு செய்வதற்கும் தயாராக இருந்தனர். மறுபுறம் இந்தசூழலை தமது பைகளை நிரப்பிக் கொள்வதற்கு பயன்படுத்திக் கொள்ள மாநிலங்களை ஆளும் சில அரசியல்கட்சிகள் தயாராக இருந்தன. தமிழக சூழல் இந்த இரண்டு தேவைகளும் சங்கமிக்கும் புள்ளியாக அமைந்தது. விளைவு? ஒரு மெகா ஊழல்!

**இழப்புகள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒருவிதம்!**

2010களில் தமிழகம் கடுமையான மின்பற்றாக்குறை யால் தவித்தது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றுவோம் என அதிமுக கூறியது. ஆட்சிக்கும் வந்தது. மின்மிகை மாநிலமாக மாற்றுவது எப்படி? அதற்கு ஒரே வழி கூடுதல் மின்னுற்பத்தி திட்டங்களை கொண்டு வருவதுதான்! இதில் பிரச்சனை என்னவென்றால் ஒரு மின் உற்பத்தித் திட்டம் செயல்படுத்த அதிகப்படியான செலவும் நீண்ட கால வெளியும் தேவை என்பதுதான்! உதாரணத்துக்கு அனல்மின் திட்டத்தில் ஒரு மெகாவாட்டுக்கு குறைந்தபட்சம் 4 முதல் 5 கோடி ரூபாய்தேவை. ஒரு திட்டம் உருவாக குறைந்தபட்சம் 4 ஆண்டுகள் தேவைப்படும். இது இந்திய அனுபவம்.

புதிய திட்டங்கள் உருவாகும் வரை தமிழக மின்பற்றாக் குறையை குறைக்கும் பணி காத்திருக்க இயலாது. எனவே அதிமுக அரசாங்கம் தனியாரிடமிருந்து மின் கொள்முதல் செய்ய தீர்மானித்தது. மின் கொள் முதலுக்கான டெண்டர் முடிவு செய்ததில்தான் ஏராளமான முறைகேடுகள் உருவாகின. எந்த வகையில் எல்லாம் மின்துறைக்கு நட்டம் ஏற்பட்டது என்பதை தணிக்கை ஆணையம் கீழ்கண்டவாறு பட்டியலிட்டுள்ளது. Merit Order of Dispatch எனும் முறையை பின்பற்றாத காரணத்தால் குறைந்த விலைக்கு பதிலாக அதிக விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்ததால் இழப்பு- ரூ.18,843.63

கோடி. இதனை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையமும் உறுதி செய்துள்ளது. இந்த இழப்பு 2013 முதல் 2016 ஆம் ஆண்டு வரைதான்! அதற்கு பிறகு எவ்வளவு இழப்பு என்பது இனிதான் தெரியவரும்.

மத்திய மின் உற்பத்தி நிலையங்கள் திட்டமிடப்பட்ட காலத்தில் செயல்படுவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக திட்டச்செலவு அதிகரித்தது. இதன் விளைவாக இழப்பு - ரூ.2381.54 கோடி. இந்த இழப்பை மத்திய அரசாங்கத்திடம் வாதாடி கேட்டு பெறும் நிலையில் தமிழக அரசாங்கம் இல்லை.

மேற்கண்ட பிரச்சனை காரணமாக தமிழக அரசாங்கம் தனியாரிடம் கொள்முதல் செய்த வகையில் கூடுதல் செலவு- ரூ.2099.48 கோடி.

நீண்ட கால ஒப்பந்தம் போட்ட வெளி மாநில 8 தனியார் நிறுவனங்களிடம் கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்ததில் இழப்பு-ரூ.712.03 கோடி.

மாநிலத்துக்குள் தனியாரிடம் போட்ட குறுகிய கால ஒப்பந்தங்களில் தரப்பட்ட கூடுதல் விலை காரணமாக இழப்பு- ரூ.1055.84 கோடி.

இந்த தனியார் நிறுவனங்களிடம் 85 சதவீதத்திற்கும் குறைவாக மின்சாரம் கொள்முதல் செய்ததால் மின்வாரியம் கட்டிய அபராதம்- ரூ.323.64 கோடி.

சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய ஒப்பந்தம் போட்ட நிறுவனங்களின் காலதாமதத்தால் மின்வாரியம் கூடுதல் விலையில் மின்சாரம் கொள்முதல் செய்ததால் இழப்பு - ரூ.605.48 கோடி.

மத்திய தொகுப்பில் குறைவான விலைக்கு மாறாக அதிக விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்ததால் இழப்பு - ரூ.350 கோடி.

ஒப்பந்தப்படி மின்சாரம் தராத தனியாருக்கு அபராதம் போட மின்வாரியம் தவறிய காரணத்தால் இழப்பு- ரூ.827.64 கோடி.

விதிகளுக்கு மாறாக நாப்தா எரிபொருள் பயன்படுத்திய தனியாரிடம் கொள்முதல் செய்ததால் இழப்பு - ரூ.493.74 கோடி.

மின் பாதைகளில் வெளி மாநிலங்களிலிருந்து வரும் மின்சாரத்தை அளவீடு செய்வதில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக இழப்பு- ரூ.242.92 கோடி.

இதுபோல வேறு சில இழப்புகளையும் கணக்கிட்டு 2013-18 ஆம் ஆண்டுகளுக்கு இடையே மின்வாரியம் சுமார் ரூ.30,000 கோடிக்கும் அதிகமாக இழப்பை சந்தித்துள்ளது என தணிக்கை ஆணையம் குறிப்பிடுகிறது.

தமிழகத்தின் நிதி நிலைமை தள்ளாடிக் கொண்டிருக்கும் தருணத்தில் இவ்வளவு பெரிய இழப்புகள் மின் கொள்முதலில் மட்டும் நடந்துள்ளது. கூடுதல் விலை கொடுத்தது/ தனியாரிடம் பெற வேண்டிய அபராதத்தை விட்டுக்கொடுத்தது/ தேவை இல்லாமல் அபராதம் தனியாருக்கு கட்டியது என பலவிதங்களில் இழப்புகள் அரங்கேறியுள்ளன. கூர்ந்து கவனித்தால் இதன் பலன்கள் விதிவிலக்கில்லாமல் தனியாருக்கு போய் சேர்ந்துள்ளன. இதற்கு கைமாறு இல்லாமல் இருக்கும் என தமிழக அரசியல் அறிந்த எவரும் நம்பமாட்டார்கள். யாருக்கு கைமாறு? எவ்வளவு? என்பதுதான் கேள்வி.

### தமிழகம் மின்மிகை மாநிலமா?

இவ்வளவு இழப்புகளையும் உருவாக்கிய பிறகும் தமிழகம் மின்மிகை மாநிலம் என அதிமுக அரசாங்கம் கூச்சமின்றி கூறுகிறது. ஆனால் உண்மையில் தமிழகம் மின் மிகை மாநிலமா என்பது மிகப்பெரிய கேள்விக் குறியாகும்.

2017-18 ஆம் ஆண்டு தமிழகத்தின் மின் தேவையில் தனது உற்பத்தித் திறனைவிட கூடுதலாக இடைவெளி இருந்துள்ளது. இவ்வளவு பெரிய இடைவெளியை வைத்துக் கொண்டுதான் தமிழகத்தை மின்மிகை மாநிலம் என அரசாங்கம் கதை அளக்கிறது. 2021 ஆம் ஆண்டு பட்ஜெட் பொழுது மின்சார அமைச்சர் முன்வைத்த கொள்கைக் குறிப்பில் தமிழகத்தில் 31,894 மெ.வா. திறனுள்ள மின் திட்டங்கள் இருப்பதாகக் கூறியுள்ளார். தமிழகத்தின் சராசரி தேவை என்பது சுமார்

| | 2013-14 | 2017-18 |
|---|---|---|
| அதிகபட்ச மின் தேவை ( Peak demand )/மெ.வா. | 15,532 | 22,375 |
| மின்வாரியம் பூர்த்தி செய்த தேவை/மெ.வா. (அ) | 12,492 | 14,975 |
| மின்வாரியத்தின் சொந்த உற்பத்தி திறன்/மெ.வா.(ஆ) | 6860 | 7144 |
| இடைவெளி (அ-ஆ) | 5632 | 7831 |

16,000 மெ.வா. எனவே தமிழகம் மின்மிகை மாநிலம் என கொள்கைக் குறிப்பு கூறுகிறது. ஆனால் இந்த புள்ளி விவரங்கள் மக்களை ஏமாற்றும் நோக்கம் கொண்டவை.

**உண்மை நிலை என்ன?**

மாநில அரசாங்கத்துக்கு சொந்தமான அனல் மற்றும் புனல் மின்நிலையங்கள் 7157 மெ.வா. மின் உற்பத்தியை தரவல்லவை. மத்திய தொகுப்பிலிருந்து 6166 மெ.வா. கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. ஆக, அரசாங்கத்தின் நேரடி அதிகாரத்தில் உள்ளது 13,323 மெ.வா. மட்டுமே! மற்ற அனைத்தும் மாநிலத்துக்குள் அல்லது மாநிலத்துக்கு வெளியே உள்ள தனியாரிடம் தமிழக அரசாங்கம் விலை கொடுத்து வாங்க வேண்டும். தனியாரிடம் வாங்கும் பொழுதுதான் முறைகேடுகளுக்கும் களம் உருவாகிறது.

தமிழகம் உண்மையிலேயே மின்மிகை மாநிலம் எனில் சுமார் 5,112 மெ.வா. மின்சாரத்தை அதுவும் பெரும்பாலானவை வெளி மாநில தனியாரிடம் வாங்க ஏன் குறுகிய கால/ நீண்ட கால ஒப்பந்தங்கள் (2028 ஆம் ஆண்டு வரை)போடப்பட வேண்டும்?

காற்றாலை மின்சக்தி -8507 /சூரிய ஒளி மின்சக்தி - 3974 மெ.வா. உட்பட சுமார் 13,458 மெ.வா. மாற்று எரிசக்தி கொண்ட மின்சாரத்தை ஏன் அரசாங்கம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை?

அவ்வாறு பயன்படுத்தியிருந்தால் தனியார் அனல் மின் நிலையங்களிடம் அதிக விலை கொடுப்பதை தவிர்க்க முடியுமே! ஏன் தமிழக அரசாங்கம் இதனை செய்ய வில்லை?

காற்றாலை மின்சக்தி நிறுவனங்கள் தமக்கு கோடிக்கணக்கான ரூபாயை தமிழக அரசாங்கம் நிலுவை வைத்துள் ளது என புகார் பட்டியல் வாசிக்கக் காரணம் என்ன?

காற்றாலை நிறுவனங்கள் தமிழக அரசாங்கத்துக்கு மின்சாரம் தருவதால் தமக்கு பலன் இல்லை என்பதால் நேரடி யாக பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் தருகின்றனவே! அது ஏன்? தமிழக அரசாங்கத்தின் திறமையின்மைக்கு அது சான்று இல்லையா? இப்படி பல கேள்விகள் உள்ளன. ஆனால் தமிழக அரசாங்கத்திடம் பதில்தான் இல்லை.

2013-18 ஆண்டுகளில் சுமார் 41,706 மில்லியன் யூனிட்டுகள் அளவுக்கு மின் உற்பத்தியை மாநில அரசாங்க திட்டங்கள் குறைவாக உற்பத்தி செய்துள்ளன என தணிக்கை ஆணையம் கூறுகிறது. இதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று அரசாங்கமே திட்டமிட்டு மின் உற்பத்தியை குறைத்தது என ஆணையம் குறிப்பிடுகிறது. மிக மலிவான தனது சொந்த மின் உற்பத்தியை ஏன் அரசாங்கம் குறைக்க வேண்டும்? இதனால் பலன் அடைவது யார்? நிச்சயமாக தனியார் மின் உற்பத்தியாளர்கள்தான்! ஆனால் பலன் அவர்களுக்கு மட்டும்தானா? வேறு சிலரும் பலன் அடைந்துள்ளனர். ஆனால் நட்டம் தமிழக மக்களுக்கு! தமிழகத்தின் நிதிநிலைமைக்கு இது சீர்கேடு! கொடுமை என்னவெனில், தனியாரிடம் மின்சாரம் வாங்க 2028 ஆம் ஆண்டு வரை நீண்ட கால ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதன் பொருள் என்ன? 2013 முதல் 2018 வரை நடந்த முறைகேடுகளும் அதன் விளைவாக ஏற்பட்ட சுமார் ரூ.30,000 கோடி போன்ற இழப்பும் இன்னும் 15 ஆண்டுகளுக்கு தொடரும் ஆபத்து உள்ளது. இதனை உடனடியாக தடுத்து நிறுத்துவது மிக அவசியம் ஆகும். இது போன்ற பல முறைகேடுகள் தமிழகத்தின் வளர்ச்சியை கடுமையாக பாதித்துள்ளன. இதற்கு காரணமான அதிமுகவை தமிழக மக்கள் எதிர்வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் வலுவாக தோற்கடிப்பது உறுதி.

அ. அன்வர்உசேன்

நன்றி தீக்கதிர்

## உங்களுக்கு தெரியுமா?

மின்வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களின் பணிப்பதிவேடுகள் கணினியினில் பதிவு செய்வதற்காக வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. 25.03.2021 முதல் 10.04.2021 வரை எந்த பணியாளர்களையும் பணி விடுப்பில் பணி இடமாற்றம் செய்ய வேண்டாம் என தெரிவித்துள்ளது.

SAP என்ற சாப்ட்வேர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

SAP என்றால் SYSTEMS, APPLICATION & PRODUCTS IN DATA PROCESSING

**மின்வாரியம் டிஜிட்டலை நோக்கியோ?**

# பெண்களும் தேர்தலும்





தேர்தல் என்பது ஒரு நாட்டின் மக்களை பொதுவாழ்வில் பதவிகளை நிர்வகிப்பதற்காக ஒரு தனிநபரை தேர்ந்தெடுக்க முடிவெடுக்கும் செயல்முறை. தேர்தல் என்பது 12-ம் நூண்டில் தொடங்கி நடந்து வருகிறது.

தமிழகத்தை பொறுத்தவரையில் தேர்தலை தீர்மானிக்கும் சக்தியாக இருப்பது சாதியும், பெண்களும் தான் தமிழக சட்டப்பேரவை தேர்தல்களில் பெண் வாக்காளர்களை மையமாக வைத்துதான் வாக்குறுதிகளை அள்ளி வழங்குகிறார்கள். அதனால் தான் கட்சிகளின் தேர்தல் அறிக்கையில் 33சதவீதம் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றல், பெண்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி, பெண்கள் தொழில் தொடங்க வட்டியில்லா கடன், பட்டதாரி பெண்களுக்கு கல்வி உதவி நிதி இப்படி பெண்களுக்கென்றே பெண்களை கவரும் விதத்தில் வாக்குறுதிகளை அள்ளித் தந்திருக்கிறார்கள்.

பெண்கள் வாக்குகளை மையமாக வைத்துத்தான் கடந்த காலங்களில் டி.வி, மிக்சி, மின்விசிறி, கிரைண்டர், இருசக்கர வாகனம் என்று கொடுக்கப்பட்டது.

ஆனால் 1920-ல் பிரிட்டிஸ் இந்தியாவிற்கு முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினர் முத்துலெட்சுமி ரெட்டியை வழங்கிய தமிழகத்தில் தற்போது சட்டப்பேரவையில் பெண்களின் பங்கேற்பு தேவையான சதவீதத்தை எட்டவில்லை. பெண்களை மையமாக வைத்து வாக்குறுதிகளை வழங்கும் அரசியல் கட்சிகள் பெண் வேட்பாளர்களை களத்தில் அதிக அளவில் நிறுத்துவதில்லை. பிரதான கட்சியான திமுக வேட்பாளர்களாக 12 பெண்களுக்கும், அதிமுக 14 பெண்களுக்கும் வாய்ப்பளித்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனக்கு ஒதுக்கப்பட்ட 6 தொகுதிகளில் 1 பெண் வேட்பாளரை நிறுத்தியுள்ளது.

இந்த தேர்தலை பெண்கள் கவனத் துடனும் மிகுந்த அக்கரையுடனும் அணுக வேண்டும் உயிரோடு வாழ்வதா, சாவதா என்பதற்கான போராட்டமாகத்தான் இந்த தேர்தலை பெண்கள் பார்க்க வேண்டும், பெண்கள் தான் சரியான முடிவெடுக்க வேண்டும், இந்த தேர்தல் நீதிக்கும், அநீதிக்குமான போர்க்களமாக மாறியிருக்கிறது.

மதத்தை சொல்லி, சாதியை சொல்லி பெண்கள் என்று சொல்லி புறக்கணிப்புகள் நடந்து வருகின்றன. மனநோயாளி போல ஆளும் மத்திய, மாநில அரசுகள் இருக்கின்றன.

**பெண்கள் பாதுகாப்பு**

தமிழகத்தில் மற்ற மாநிலங்களை விட பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைவு என்றாலும், பொள்ளாச்சி குற்றங்கள், கோவில்களில் நடைபெறும் குற்றங்கள், காவல் நிலையங்களில் கேள்விக்குறியாகும் பெண்களின் பாதுகாப்பு, பணிபுரியும் இடங்களில் நடைபெறும் பாலியல் குற்றங்கள், தெருவில் போகும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றால் காவல் நிலையங்களில் செல்லலாம். காவல்துறை அதிகாரிக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் காவல் அதிகாரிகளின் அத்துமீறல்கள் போன்ற சம்பவங்களும் அவற்றில் உள்ள அரசியல் தலையீடுகளும் பெண்களுக்கு அச்சம் தருவதுடன் நெருக்கடியோடு தான் தினம் தினம் பெண்கள் சுமந்து போக வேண்டியுள்ளது. இதையெல்லாம் மாற்றம் வேண்டுமானால் நாம் மாற்றி யோசிக்க வேண்டும். நமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை

சரியாக பயன்படுத்த வேண்டும்.

பெண்கள் அதிகளவில் அதிகாரத்திற்கு வருவதால் மட்டுமே பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறையும், இந்திய அளவிலும் தமிழக அளவிலும் பிரதான கட்சிகளின் பெண் வேட்பாளர்கள் குறைவாகத்தான் நிறுத்தப் படுகிறார்கள்.

தேர்தலை பொறுத்தவரை வேட்பாளர் களில் பெண்களின் எண்ணிக்கை குறைவென் றாலும் வாக்களார்களில் அதிகம் பெண்கள் தான். அடுத்த 5 ஆண்டுகளில் இந்திய அரசின் பிரதிநிதிகளை தேர்வு செய்யும் இடத்தில் பிரதானமாக இருக்கப் போகிறவர்கள் பெண்கள் தான்.

பெண்கள் இந்த தேர்தலை கனத்தோடு சந்திக்க வேண்டும். நீட் தேர்வும், மாணவி அனிதாவின் மரணமும் மறக்க முடியாதவை, தூத்துக்குடி சம்பவத்தில் இறந்த பெண்கள் குறிப்பாக வாயில் துப்பாக்கி குண்டு பாய்ந்து இறந்த ஸ்னோலின் கண்முன்னே வருகிறாள். தூத்துக்குடி விமானத்தில் பாசிச பா.ஜ.க ஒழிக என்று ஒலித்த மாணவி சோபியாவின் குரல் அதனால் மாணவிக்கு ஏற்பட்ட தாக்குதல்கள், எட்டுவழிச்சாலை போராட்டத்தை முன்னெடுத்த பெண்கள் மீது தொடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள், வழக்குகள் இதற்கெல்லாம் யார் காரணம் ஆளும் மக்கள் விரோத, பெண்கள் விரோத அரசுகள் தான். பெண்கள் யோசிக்க வேண்டிய தருணம், மாற்றம் காண வேண்டிய தருணம்.

**விலைவாசி உயர்வு**

பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே போகிறது. இதனால் அனைத்து அத்தியாவசியப் பொருட்களோடு விலை உயர்ந்துள்ளது. இதிலும் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் தான்.

சிலிண்டர் விலை கையை சுடுகிறது. மாதத்தில் 4 முறை விலையேற்றம் 405 ரூபாய் இருந்த கேஸ் சிலிண்டர் 850 ரூபாய்க்கு போய் விட்டது. ஆளும் அதிமுக தேர்தல் பரப்புரையில் வருடத்திற்கு 6 சிலிண்டர் இலவசம் என்று வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறது. பெண்கள் வாக்குகளை பெற துடிக்கிறது. பெண்களை புத்திசாலிகள் கேஸ் சிலிண்டர் விலையை குறைக்க முடியாத அரசு எப்படி 6 சிலிண்டர் இலவசமாக தரும் பெண்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**சட்டதிருத்தம்**

போராடிப்பெற்ற தொழிலாளர் நல சட்டங்கள் திருத்தம் என்ற பெயரில் உரிமைகள் பாதிக்கப்படுகிறது. புதிய கல்வி கொள்கை என்ற பெயரால் 5 மற்றும் 8 வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு திணிப்பு, போராடி பெற்ற 5 மணி நேர வேலை காவு கொடுக்கப்பட்டு 12 மணி நேரமாக மாற்றப்படுவது, குறிப்பாக வேளாண் சட்டம் 115 நாட்களை கடந்து விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தை கண்டு பிடித்தவர்கள் பெண்கள், ஆண்களுக்கு இணையாக போராடுகிறார்கள். விவசாயத்தை பாதுகாக்கும் நல்லாட்சி அமைய நாம் துணை நிற்க வேண்டும்.

**பொதுத்துறை தனியார் மயம்**

அனைத்து பொதுத்துறைகளும் தனியார் மயம் 5 கோடி முதலீட்டில் 1954-ம் ஆண்டு துவக்கப்பட்ட எல்.ஐ.சி 2021-ல் 31 லட்சம் கோடியாக வளர்ந்துள்ளது. அதிலும் தனியார் மயம், எல்ஐசி மட்டுமல்ல வங்கி தனியார்மயம், விமான போக்குவரத்து, தனியார் மயம், ரயில்வே தனியார் மயம், போக்குவரத்து தனியார் மயம் இவைகளுக்கெல்லாம் மின்துறையும் தனியார் மயம்.

மின்துறை தனியார் மயமாக்கப்பட்டால் மின் கட்டணம் உயரும், வீடுகள், வழிபாட்டு தளங்கள், விசைத்தறி, கைத்தறி போன்றவைகளின் மானியமும் மறுக்கப்படும், குறிப்பாக விவசாயத்திற்கு இலவச மின்சாரம் ரத்தாகும். ஒட்டு மொத்த மின்துறையை சந்தையாக்கும் மின்சார சட்டதிருத்த மசோதா வருகிற பாராளுமன்ற கூட்டத்தொடரில் சேர்க்கப்பட்டுள்ளது. நமது மின்துறையை பாதுகாக்க நாம் சரியான தெளிவான முடிவெடுக்க வேண்டும். அதற்கு ஆயுதமாக இந்த தேர்தலை கையாள வேண்டும்.

**மின்துறையை பாதுகாக்க**

இந்த தேர்தலில் இடதுசாரிகள் பங்குபெறும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இந்த தேர்தல் அறிக்கையில் மின்துறையை பாதுகாக்க பல நல்ல திட்டங்கள் சொல்லப்பட்டுள்ளது.

மின்துறை உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும், மின்வாரியத்தில் பணி செய்யும் ஒப்பந்த ஊழியர்கள் பணி நிரந்தரம் குறித்து பரிசீலிக்கப்படும், மாதமாதம் மின் கணக்கீடு செய்யப்படும், ஒய்வூதியம் பெறுவதற்கு 80 வயது நிறைவு பெற்றவுடன் 20 சதவீதம் உயர்த்தி வழங்கப்படும். ஓய்வூதியம் 70 வயது பூர்த்தியானவுடன் 10 சதவீதம் உயர்த்தியும், 80 வயது பூர்த்தியானவுடன் 10 சதவீதம் உயர்த்தியும் வழங்கப்படும் என்றும், இதற்கெல்லாம் சிகரம் வைத்தார்போல் பழைய ஓய்வூதிய திட்டம் நடைமுறைக்கு வர முயற்சி மேற்கொள்ளப்படும் போன்ற மின்துறையை பாதுகாப்பதற்கான

திட்டங்கள் தேர்தல் அறிக்கையில் சேர்க்கப் பட்டுள்ளது.

குடும்பத்தின் ஆணி வேராக இருக்கும் பெண்கள் கிடைத்துள்ள வாய்ப்பை சரியாக பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்குள் இருக்கிறது. அன்பான, அறிவான, பண்பான சிந்தனைகள் அதை நாம் பெண்கள் மிகச்சரியாக பயன்படுத்த வேண்டும்.

பெண்களின் வளர்ச்சியும், மாற்றமும் சமூகத்தின் வளர்ச்சியோடு சம்மந்தப்பட்டது. மட்டுமல்ல பெண்களின் வளர்ச்சியை பொறுத்தே சமூகத்தின் வளர்ச்சி இருக்கிறது. எனவே, வருகின்ற தேர்தலை சமூக மாற்றத்திற்கான தேர்தலாக நினைத்து மாற்றத்தை கொண்டு வருவோம்.

புதிய சமூகம் , சமத்துவத்திற்கான சமூகத்தை படைக்க இந்த தேர்தலில் இடதுசாரிகள் இணைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

பாரதி சொல்லியது பெண்களைப் பார்த்து ரௌத்திரம் பழகு என்று ரௌத்தரம் என்பது நம் கண் முன்னே இழைக்கப்படும் கொடுமைகளை காணும்போதும், அநீதியை காணும் போதும் எழுச்சிக் கொண்டு தட்டிக்கேட்பதே ரௌத்திரம். மத்தி, மாநில அரசுகள் கடைபிடிக்கும் அநீதிகளை கண்டு நாம் ரௌத்திரம் பழக வேண்டும். சகோதரிகளே வாருங்கள் நாம் ரௌத்திரம் பழகுவோம்.

**தஞ்சை தனலட்சுமி**

**தொழிற் சங்ககங்களின் வேண்டுகோளுக்கிணங்க மின்வாரிய வாரிய ஊழியர்கள் மின்விபத்து மற்றும் விபத்துகளினால் உயிரிழப்பு ஆனவர்களின் இறுதிச் சடங்கிற்காக உயர்த்திய தொகையை வாரிசுதாரர்களிடம் வழங்க பிறப்பிக்கப்பட்ட வாரிய உத்திரவு**

**TAMILNADU GENERATION & DISTRIBUTION CORPORATION LIMITED**

(A B S T R A C T)

TANGEDCO/TANTRANSCO - Fatal Accident - Departmental Staff - Special Gred for Funeral day expenses to be sanctioned to the employees irrespective of cadre – Orders issued.

**(Administrative Branch)**

**(Per.) CMD TANGEDCO Proceedings No.16** dated :11.02.2021.
Thai : 29, Saarvari Varudam,
Thiruvalluvar Aandu 2052.

**READ:-**

1) Circular Memo.No.108958/1497/G35/G351/2012-6, dt.15.12.2014.
2) CMD note approved dt.08.02.2021.

## PROCEEDINGS:-

As per the Circular Memo cited, order has been issued to sanction the funeral expenses amount of Rs.5,000/- with effect from 18.01.2010 for the Fatal Accident.

2) The employees as well as the Unions have represented to consider and pay Special Grant for Funeral day expenses to the dependents to meet out the funeral expenses irrespective of cadre. They have requested to enhance the said compensation amount to Rs.25,000/-.

3) As a gesture of goodwill, CMD/TANGEDCO has approved the proposal accordingly. Hence it is hereby ordered that the "Special Grant for Funeral day expenses" for a sum of Rs.25,000/- (Rupees Twenty five thousand only) be paid to the dependents of the employees of TANGEDCO/TANTRANSCO irrespective of cadre due to fatal accident while on duty. The amount shall not be adjusted/recovered in the future payments due for the deceased.

4) The power is delegated to the Superintending Engineers to sanction and disburse the “Special Grant for Funeral expenses” amount to the dependents of the employees on the day of death/funeral. The date of implementation of order will be effect from 08.02.2021 The expenditure is debitable to the head of A/c No. 75.715

5) The receipt of the Proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR/TANGEDCO)**

( D.RAVICHANDRAN )

**CHIEF ENGINEER/PERSONNEL**

**தமிழ்நாடு மின்ஊழியர் மத்தியஅமைப்பு**
பதிவு எண் 158/சிபிடி - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : EEFI & CITU
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை 600 005.
போன் : 044 - 28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| தி. ஜெயசங்கர் | எஸ். இராஜேந்திரன் | எம். வெங்கடேசன் |

**நாள்: 24.03.2021**

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**144, அண்ணாசாலை, சென்னை** 600 002

**ஐயா,**

**வணக்கம்**

பொருள் : **நிர்வாகம் - கேங்மேன் பணியாளர்கள் நியமனம் பணி பாதுகாப்பு, பணி நேரங்கள் - மற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி வழங்குவது தொடர்பாக**

தமிழ்நாடு மின்வாரியத்தில் புதிதாக கேங்மேன் என்ற பதவிக்கு 9,613 பேர் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டது. இவர்களது பணிகள் தொடர்பாகவும், பணி பாதுகாப்பு தொடர்பாகவும் தங்களது மேலான நடவடிக்கைக்காக கீழ்கண்ட கருத்துக்களை சங்கத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம்.

கேங்மேன் பதவிக்கு தேர்வானவர்களில் கனிசமான ஒப்பந்த ஊழியர்களும் உள்ளனர். பெரும்பாலானவர்கள் மாவட்டம் விட்டு மாவட்டம் பலநூறு கிலோ மீட்டருக்கு அப்பால் தங்களது குடும்பத்தை பிரிந்த பணியாற்றி வரும் நிலையில், முறையான பாதுகாப்பு விதிகள் கடைப்பிடிக்காத சூழலில் தொடர் விபத்துக்கள் ஏற்பட்டு வருவது கவலையளிக்கிறது. கேங்மேன் பயிற்சி காலத்தில் அவர்களுக்கு முறையான பயிற்சியும், உத்தரவாதத்துடன் கூடிய மேற்பார்வையும் அவசியம் ஆனால் சமீபத்தில் கோவை வடக்கு வட்டத்தில் கேங்மேனாக பணியேற்பு செய்து 11வது நாளில் ஏற்கனவே ஒப்பந்த ஊழியராக பணியாற்றி வந்த திரு.சாய்சந்துரு என்பவர் 11.03.2021 அன்று மின் விபத்துக்குள்ளாகி கம்பத்திலேயே மரணம் அடைந்து இருப்பது அதிர்ச்சியை அளித்துள்ளது.

அதே போல புதிதாக பணியேற்பு செய்த இந்த கேங்மேன் பணியாளர்களுக்கு முறையான மேற்பார்வையுடன் பயிற்சி வழங்காமல் பல்வேறு இடங்களில் நிலுவையிலுள்ள அனைத்து பணிகளையும் முடித்திட திட்டமிட்டு இரவு 7 மணி வரை தொடர்ந்து பணி வாங்குவதாக பணியாளர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். இது விபத்துக்களை ஏற்படுத்தவே உதவும் என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

கேங்மேன் பணி நியமனம் தொடர்பாக வழங்கப்பட இடைக்கால தீர்ப்பில் ஒப்பந்த ஊழியர்களுக்கு, அவர்களுக்கு வழங்குகின்ற பணியை எந்த காரணம் கொண்டும் நிறுத்தக்கூடாது என்ற எண்ணத்தில் தற்போது வழங்கப்படுகின்ற முறையில் பணிகள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளதை தங்களது பார்வைக்கு கொண்டு வர விரும்புகின்றோம். பல்வேறு இடங்களில் பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களுக்கு வேலை வழங்க மறுப்பது இயற்கை நீதிக்கு முரணானதாகும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் மேற்கண்ட கருத்துக்களை கவனத்தில் கொண்டு, கேங்மேன் பணியாளர்களுக்கு பணிகளை வழங்க தகுந்த அறிவுரையை கீழ்மட்ட அலுவலர்களுக்கு வழங்குவதோடு, ஒப்பந்த ஊழியர்களுக்கும் பணி வழங்கிட தகுந்த நடவடிக்கை எடுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

**தங்கள் உண்மையுள்ள**

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்தியஅமைப்பு

பதிவு எண் 158/சிபிடி - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : EEFI & CITU
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை 600 005.
போன் : 044 - 28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| தி. ஜெயசங்கர் | எஸ். இராஜேந்திரன் | எம். வெங்கடேசன் |


பெறுநர் **நாள்: 24.03.2021**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002
ஐயா,

வணக்கம்

பொருள் : நிர்வாகம் கொரானா இரண்டாவது அலை ( Covid- 19 Wave-2) சமூகத்தில் வேகமாக பரவுவது - மின்வாரிய தலைமை அலுவலகம் (Board Office) மற்றும் மண்டல, வட்ட அலுவலகங்கள் முன்பாக தடுப்பூசி மையம் அமைத்து ஊழியர்கள், பொறியாளர்கள், அதிகாரிகளுக்கு தடுப்பூசி போட தக்க ஏற்பாடுகளை செய்வது - தொடர்பாக

மத்திய சுகாதாரத்துறை மற்றும் மாநில சுகாதாரத்துறைகள் தொடர்ந்து தமிழகத்தில் கொரானா தொற்று இரண்டாவது அலை வேகமாக பரவி வருவதாகவும் அனைவரும் கவனத்துடனும், பாதுகாப்புடனும், முகக்கவசம் அணிந்தும் இருக்க வேண்டும் என்று தொடர்ந்து விழிப்புணர்வு பிரச்சாரங்களை செய்து வருகின்றனர். 45 வயதை கடந்த முன்கள பணியாளர்கள், அனைவரும் தடுப்பூசியை கட்டாயமாக போட்டுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசும் தொடர்ந்து பிரச்சாரத்தை செய்து வருகின்றது.

தமிழக அரசும், வாரியமும் அறிவித்தாலும், அறிவிக்காவிட்டாலும் மின்வாரியஊழியர்கள் தடையில்லாத மின்சாரத்தை விநியோகம் செய்கின்ற சமூக அக்கறை உள்ள முன்களப்பணியாளர்கள்.

மின்வாரிய களப்பணி ஊழியர்கள், கணக்கீட்டு ஊழியர்கள் மற்றும் பொறியாளர்கள் தங்களது பணியை மக்களோடு இணைத்துக் கொண்டு தொய்வில்லாமல் செய்வதை தனது கடமையாக கொண்டுள்ளனர். நோய் தொற்று வேகம் அதிகரித்துள்ள இந்த சூழலில் மின்வாரிய ஊழியர்கள், அதிகாரிகள்,பொறியாளர் அனைவருக்கும் கொரானா தொற்று தடுப்பூசி போட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

ஊழியர்களின் பணிச்சூழல், பணி நேரத்தில் மருத்துவமனை செல்ல முடியாத பல்வேறு காரணங்கள் இருப்பதால் தடுப்பூசி மையங்களை மின்வாரிய தலைமையகத்திலுள்ள மருத்துவமனை, மற்றும் உற்பத்தி வட்டங்களிலுள்ள மருத்துவமனையிலும், இதரப்பகுதிகளில் மண்டல அலுவலகம் மற்றும் வட்ட அலுவலகங்கள் பணியாற்றும் ஊழியர்கள் நலன் கருதி மேற்கண்ட இடங்களிலும் சிறப்பு முகாமை அமைத்து தடுப்பூசி போடுவதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

# காசு கொடுத்த பின்னரே கரெண்ட்




## காசு இல்லாதவன் காடா விளக்கை நோக்கி செல்



மின்சாரம் என்பது தாய் தொழில். நவீன சமுதாயத்தில் மின்சாரம் இன்றி ஏதும் அசையாது. நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, விவசாய முன்னேற்றத்திற்கு பொருளாதார வளர்ச்சிக்கு மின்சாரம் இன்றியமையாதது என்பதை உணர்ந்தே மின்சாரம் பொதுத் துறையாக சேவைத்துறையாக செயலாற்றிட வழி வகுத்தார்கள்

மின்சாரம் பொதுத் துறையாக இருந்த காரணத்தால் சமுதாயத்தின் அனைத்து பிரிவினர்க்கும், குக் கிராமங்களுக்கும் பட்டி தொட்டிகளுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் அவர்கள் ஒரளவு செலுத்தும் கட்டணத்திற்கு மின்சாரத்தை அளிக்க முடிகின்றது.

கடந்த 73 ஆண்டுகளாக பின்பற்றிய கொள்கையை தலை குப்புற மாற்றும் வகையில் சமூக பொருளாக உள்ள மின்சாரத்தை லாப மீட்டும் சந்தை பொருளாக மாற்ற மின்னல் வேகத்தில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மின் நுகர்வோர்களை பொறுத்த வரையில் தொழிற்சாலை, வணிகம்,வீடு, விவசாயம், குடிசை, பொருளாதார ரீதியாக நலிவடைந்தோர் என பலதரப்பட்ட மின் நுகர்வோர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஒரே விதமான மின் கட்டண நிர்ணயிப்பு என்பது சமூக நீதி வழங்கியது ஆகாது அதனால் தான் தொழிற்சாலை, வணிக மின் நுகர்வோர்களுக்கு சற்று கூடுதல் கட்டணமும் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு சற்று குறைவான கட்டணமும் விவசாயம், குடிசை போன்ற மின் நுகர்வோர்களுக்கு இலவச மின்சாரமும் வழங்கப்பட்டு ஒரளவு சமூக நீதி பாதுகாக்கப்படுகிறது.

மின் கட்டண நிர்ணயிப்பை பொறுத்த வரையில் உற்பத்தி செலவு மானியம், வெட்டு மானியம் போன்றவைகளை கணக்கில் கொண்டு மின் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது

அதாவது குடிசைகள் மற்றும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரமும், வீட்டு மின் நுகர்வோர்களுக்கு மானிய விலையில் மின்சாரமும் அதாவது உற்பத்தி செலவைவிட சற்று குறைவான விலையில் மின்சாரமும் வணிகம் தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி செலவைவிட சற்று கூடுதல் விலையில்/வெட்டு மானியம் மூலம்/ மின் கட்டண நிர்ணயிப்பு செய்து, வசூலித்து இலவச மானிய விலையில் மின் வினியோகம் செய்வதனால் ஏற்படும் இடைவெளியை ஈடு செய்து சமூக நீதி வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது மத்தியில் ஆளும் மோடி பி.ஜே.பி அரசு இதை அனுமதிக்குமா ? இவர்கள் யார் நலனுக்காக உள்ளார்கள் அம்பானி, அதானி, டாடா, ஜி. எம். ஆர், டி. வி. எஸ், டி. ஐ. சைக்கிள், நல்லி சில்க்ஸ், சரவண ஸ்டோர்ஸ் போன்ற பெரு சிறு கார்ப்பரேட் கம்பனிகாரர் களுக்காக தானே உள்ளார்கள் இவை போன்றவர்கள் கூடுதல் கட்டணம் செலுத்தினால் மோடிக்கும், நிர்மலாவுக்கும், பழனிசாமிக்கும் வலிக்காதா? வலிக்கும்.

அதனால் தான் மத்தியில் ஆளும் பி.ஜே.பி அரசு இந்திய நாடு முழுவதும் புதிய மின் கட்டணம் நிர்ணயிப்பு, ஒரே மொழி, ஒரே இனம், ஒரே தேர்தல், ஒரே கிரிட் போல ஒரே மின் கட்டணம் என்பதை நிர்ணயித்துள்ளார்கள்.

மத்திய அரசு நிர்ணயிக்க உள்ள புதிய மின் கட்டணத்தை பொருத்த வரையில் மானியம், வெட்டு மானியங்களை கணக்கில் கொள்ளாமல் உற்பத்தி செலவு மின்சாரத்தை கொண்டு சென்று வினியோகிப்பது போன்ற நிர்வாக செலவுகளை கணக்கில் கொண்டு மட்டும் மின் கட்டணத்தை நிர்ணயிக்க உள்ளார்களாம்.

கட்டண நிர்ணயிப்புக்கு பின்னர் மானியம் வெட்டு மானியம் அகற்றப்பட உள்ளதால் விவசாயம் குடிசை போன்ற மின் நுகர்வோர்களும் மின் கட்டணம் செலுத்தும் நிலைக்கு தள்ளப் படுவார்கள். வெட்டு மானியம் அகற்றப்பட உள்ளதால் வணிகம் தொழிற்சாலை மின் நுகர்வோர்கள் செலுத்தும் அளவுக்கு வீட்டு மின் நுகர்வோர்கள் கூடுதல் மின் கட்டணம் செலுத்தும் நிலை உருவாகும்.

தற்போது மின் நுகர்வோர்கள் மின்சாரத்தை பயன்படுத்திய பின்னரே மின் கட்டணத்தை செலுத்துகின்றனர், நாடு முழுவதும் ஒரே விதமான மின் கட்டணம் மானியம் வெட்டு மானியங்கள் அற்ற மின் கட்டணம், லாப நோக்கோடு கூடுதல் மின் கட்டணம் என்று நிர்ணயிக்க உள்ளதால் மின்சாரத்தை அளித்து மின் கட்டணத்தை வசூலிப்பதில் சிரமம் ஏற்படுமோ என அஞ்சியே மின் கட்டணத்தை செலுத்திய பின்னரே மின்சாரம் கிடைக்கும் என pre paid system அதாவது கட்டணத்தை செலுத்தி கரண்டை பெறு எனும் திட்டத்தை வேக வேகமாக அமுல் படுத்த மத்திய அரசு கால கெடுக்கள் நிர்ணயம் செய்து திட்டமிட்டுள்ளது

அதாவது பிரி பெய்டு மீட்டர்களை இந்திய நாடு முழுவதும் மார்ச் 2026 க்குள் மாநில மின் வாரியங்கள் பொருத்தி முடிக்க வேண்டும் கால நிர்ணயப்புகள் பொருத்தி முடிக்காத மாநில மின் வாரியங்களுக்கு மத்திய அரசின் நிதி உதவி நிறுத்தப்படும் ஜனவரி 2020 இல் பிரி பெய்டு மீட்டர் பொருத்தும் பணியை துவங்கி இருக்க வேண்டும்

2021 செப்டம்பருக்குள் பிரி பெய்டு மீட்டர் பொருத்து வதற்கான முழுமையான திட்ட அறிக்கையை சமர்பிக்க வேண்டும்

இந்திய நாடு முழுவதும் உள்ள மின் நுகர்வோர்களுக்கு பிரி பெய்டு மீட்டர் பொருத்த ஆகும் உத்தேச செலவு
3,03,758 கோடி என்றும் இதில் மத்திய அரசின் நிதி உதவியாக 97,631 கோடி அதாவது 15 சதவீதம் நிதி உதவியாக அளிக்க உள்ளார்களாம்.

இத் திட்டத்தை அமுலாக்க மத்திய அரசே திட்ட மேற்பார்வை குழுவை ( project management agency) அமைப்பார்களாம் இத்திட்ட அமுலாக்கம் தொடர்பாக மத்திய அரசு, மாநில அரசு மின் வினியோகம் நிறுவனம் ஆகிய மூவர் கொண்ட முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுமாம்.

மத்திய அரசு இத்திட்டம் அமுலாக்கல் தொடர்பாக விரட்டுகின்ற காரணத்தால் அமுலாக்கம் என்பது புயல் வேகத்தில் துவங்கி உள்ளது. 20 மாநிலங்களில் இது வரை பொருத்தப்பட்டுள்ள எண்ணிக்கை 23,19,214 நான்கு மாநிலங்களில் 8,02,000 மீட்டர் பொருத்த டெண்டர் விட்டுள்ளார். மேலும் 13 மாநிலங்களில் 76,10,770 மீட்டர்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

* இத்திட்டம் முழுமையாக அமுல் படுத்தப் பட்டால் சமூக பொருளாக உள்ள மின்சாரம் சந்தை பொருளாக மாற்றப்படும்.

* காசு உள்ளவனுக்கே மின்சாரம் காசு இல்லாதவர்கள் காடா விளக்கை நோக்கி செல்லும்" அவல நிலை

* இத்திட்டம் அமுலாக்கபட்டால் ஆயிரக் கணக்கானோர் வேலை இழப்பு

* புதிய வேலை வாய்ப்புக்கு சாவு மணி

* இத் திட்ட அமுலாக்கத்திற்கு வழி வகுக்கும் மின்சார சட்ட திருத்த மசோதாவை அனுமதிக்கலாமா...?

இந்திய மின் உற்பத்தியை கார்ப்பரேட்டுகளின் காலடியில் கொண்டு சேர்ப்பதில் வெற்றி கண்ட பி.ஜே. பி அரசு, அதோடு தன் வேட்கை அடங்காமல் மின் வினியோகத்தையும் தனியாரிடம் கொண்டு சேர்ப்பதில் வெறியாய் அலையும் மத்திய அரசு, அதோடு மட்டும் நிற்காமல் சுமார் 5 ஆண்டுகளுக்கு பின்னர் தேவைப்படும் மின் வினியோக கட்டமைப்பை மக்களின் வரிப்பணத்தில் உருவாக்குவதோடு, மின் வினியோகமும், கட்டண நிர்ணயிப்பும் தனியாரின் ஆதிக்கத்திற்கு செல்வதற்கு முன்னரே, நேரடியாக சென்று கணக்கீடு செய்யாமலேயே மின் கட்டணத்தை வசூலிக்கும் பிரி பெய்டு மீட்டர்களை மின் வாரியத்தின், மக்களின் வரிப்பணத்தை கோடி கணக்கில் செலவு செய்து பொருத்தி, கார்ப்ரேட்டுகளுக்கு எந்த வித வலியும் இல்லாமல் கொள்ளையடிக்க வழி வகை செய்யும் பி.ஜே.பி.அரசு. அதை வேடிக்கை பார்க்கும் வீணர்களாக இருக்கலாமா..?

**- எஸ்.எஸ்.எஸ்**



# கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கு மேலும் பணிச்சுமை

தமிழக மின்சார வாரியத்தில் சுமார் 4000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ளது. இவர்களது பிரதான பணி மின் அளவீட்டை கணக்கீடு செய்து வசூல் பணியில் ஈடுபட்டு வாரியத்தின் வருவாயை பெருக்குவதில் மகத்தான பணியை செய்து வருவது கணக்கீட்டு பிரிவு ஊழியர்களே.

கணக்கீட்டாளர்களிலிருந்து கணக்கீட்டு ஆய்வாளராக பதவி உயர்வு பெற்றும் கூட ஆண்டுகள் பல கடந்த பின்பும் இன்றும் நூற்றுக்கணக்கான கணக்கீட்டு ஆய்வாளர்கள் கணக்கீட்டு பணியை செய்து வருகின்றனர்.

இவர்கள் கணக்கீடு செய்ய வழங்கிய HHD ஆனது சரியாக கணக்கீடு செய்ததை பதிவு செய்தும், கணினியில் ஏற்றுகின்ற பொழுது பல மின் இணைப்புகளின் கணக்கீடு செய்த விவரங்கள் காணாமல் போகிறது. பணியாளர்கள் மீண்டும் விடுபட்ட மின் இணைப்புகளை கணக்கீடு செய்து Manual ஆக ஏற்ற வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இதை செய்தால் ஏன் Manual ஆக ஏற்றினாய் என்று கேள்விகள் பல. தரமான HHD யை வாங்கித்தராத நிர்வாகம், அதை பழுது பார்ப்பதற்கு கூட இந்த பணியாளர்களிடம் செலவு செய்யும் நிலையை உருவாக்கி உள்ளது.

இதோடு தற்போது மின் இணைப்பில் பொருத்தப்படும் மீட்டர்கள் தரமானதாக இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் கணக்கீடு செய்வதில் மிகுந்த சிரமத்தை அனுபவித்து வருகின்றனர். பல்வேறு இடங்களில் மீட்டர் பலகைகள் ஆளில் மீட்டர் பலகைகளை உயரமான இடத்திலும் சமையல் அறை, படுக்கை அறை, பாத்ரூம் உள்ளிட்ட இடங்களில் இருப்பதால் மின் அளவீடு செய்ய இந்த ஊழியர்கள் படும்பாடு சொல்லி மாளாது. குறிப்பாக பெண் ஊழியர்களின் நிலையோ மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறது.

கொரானா தொற்று நோய் காலத்தில் கூட இந்த கணக்கீட்டு பணியாளர்களின் பணியை முன்களப் பணியாளர்களாக கருதாத நிர்வாகமாக வாரியம் இருந்தது.

இந்த கணக்கீட்டுப் பணியாளர்களை சொல்லெனா துயரத்தில் ஆழ்த்த விவசாய மின் இணைப்புகளையும், கணக்கீடு செய்ய வேண்டும் என்ற உத்தரவை பிறப்பித்துள்ளது. கணக்கீடு செய்யப்படும் விவசாய மின் இணைப்புகளின் எண்ணிக்கையை அவர்கள் அன்றாடம் எடுக்கும் வரையறுக்கப்பட்ட மின் இணைப்புகளின் எண்ணிக்கையில் அடங்கிடும் என தெரிவித்துள்ளது.

தற்போது 22.02.2018-ல் எற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட மின் இணைப்புகளை அளவீடு செய்வதில் HHD மற்றும் தரமற்ற மீட்டர்கள் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது. இதே நேரத்தில் விவசாய மின் இணைப்பை அளவீடு செய்ய ஒவ்வொரு விவசாயின் தோட்டத்திற்கும் செல்ல வேண்டிய சூழல் காரணமாக தினசரி ஒதுக்கப்பட்டு மின் இணைப்புகளை கணக்கீடு செய்ய இயலாத சூழல் ஏற்படுகிறது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு விவசாய மின் இணைப்புகளில் மின் அளவீடு செய்த நிலை வேறு. ஆனால் தற்போது இருக்கின்ற புறச்சூழல் வேறு. இவைகளை கணக்கில் கொண்டு தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி ஒரு தீர்வு காண்பதற்கு பதிலாக ஏற்கனவே பதவி உயர்வு பெற்றும், அந்த பணியைச் செய்ய முடியாமல், தற்போது செய்து வரும் பணியை தொடர்ந்து செய்து வரும் கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள் மத்தியில் அவர்களை சோர்வடையச் செய்துள்ளது.

ஏ.சி அறையில் இருந்து உத்தரவு போடும் எஜமானர்களே! இந்த ஊழியர்கள் மீது கருணை காட்டுங்கள் போராட்டத்திற்கு தள்ளாதீர்கள்!

## மின்வாரிய பணியாளர்கள் தொகுதி 1 மற்றும் 2ல் பணியாற்றுபவர்களுக்கு வாரிய விதிகளின்படி ஈட்டிய விடுப்பு வருடத்தில் நான்கு முறை மட்டும் வழங்க வகை செய்யும் வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**Secretariat Branch,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002**

**Memorandum (Per) No. 8535/A18/A182/2021- 1, dated 22.02.2021.**

Sub : Establishment – Class I & II Services – Restriction on the number of spells for availing Earned Leave – Orders - Issued.

As per Section 19(vi) of Tamil Nadu Electricity Board Standing orders for non-clerical Workmen, Earned Leave can generally be availed of by a non-clerical workman upto a maximum of three times a year; and as per Section 13(ii) of Tamil Nadu Electricity Board Standing orders for Clerical Workmen, Earned Leave can generally be availed of by a Clerical workman upto a maximum of four times a year. However, the Management may, at its discretion, and according to the circumstances and the nature of the leave application, waive the stipulation that earned leave can be taken only upto a maximum of three/ four times in a year as the case may be. Such a restriction has not been imposed on the officials other than those covered under both the sets of Tamil Nadu Electricity Board Standing orders.

2. It has been brought to the notice that due to non-availability of any restrictions on the number of spells of Earned Leave to be availed by the officials in Class I and II services, some officials are in the habit of availing Earned Leave more frequently, the spells of which, in certain cases, exceed more than four in a year. The issue has been examined in detail and it has been decided to impose certain restrictions on the maximum number of spells of Earned Leave to be availed by the officials in Class I and II services in a year.

3. Accordingly, it is hereby ordered that the maximum number of spells of Earned Leave which can generally be availed of by the officials in Class I and II services, shall be restricted to **"Four"** in a year. However, the Management may, at its discretion, and according to the circumstances and the nature of the leave application, waive the stipulation that earned leave can be taken only upto a maximum of four times in a year.

4. The receipt of this Memorandum shall be acknowledged.

(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)

M.BHAVANI,
SECRETARY

# தூக்கியெறிப்பட வேண்டிய புதிய பென்சன் திட்டம்

மத்திய அரசு புதிய ஓய்வூதிய திட்டத்தை 2004-ம் ஆண்டு அமலாக்கம் செய்தது. அதன்படி இந்தியா முழுவதுமுள்ள அனைத்து மாநிலங்களும் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வந்தது. இந்தியாவில் முதன் முறையாக தமிழகத்தில் 1.4. 2004 முதல் அதிமுக அரசு அமலாக்கம் செய்தது. பங்களிப்பு ஓய்வூதிய திட்டமென்பது ஊழியர்கள் தங்களது அடிப்படை சம்பளத்தில் 10 சதவீதமும் அதற்கீடான 10 சதவீதம் நிர்வாகம் அளித்து சேர்ந்து வரும் தொகையை ஒவ்வொரு ஆண்டும் பங்குச்சந்தையில் முதலீடு செய்து அதில் கிடைக்கும் இலாபத்தை தொழிலாளிக்கு அளிக்கும் என்பது இந்த திட்டத்தின் சாரம்சமாகும். இந்த திட்டத்திற்கு அனைத்து தொழிற்சங்கங்களும் கடுமையான எதிர்ப்பை காட்டின. இருப்பினும் இந்த சட்டம் அமலுக்கு வந்தது . இந்த சட்டத்தை கொண்டு வந்த பெருமை மத்தியில் மறைந்த பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான பிஜே.பி. கூட்டணி அரசுக்கும், வேகமாக அமல்படுத்திய பெருமை மாநிலத்தை ஆண்ட மறைந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களது அதிமுக அரசாங்கத் தையே சாரும்.

01.04.2004 -ம் ஆண்டுக்கு பிறகு புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின்படி தமிழக அரசு துறைகளில் பல லட்சம் பேர் பணி புரிந்து வருகின்றனர். மின்வாரியத்தில் 45,000 தொழிலாளர்கள் புதிய பென்சன் திட்டத்தில் உள்ளனர். பென்சன் என்ற பெயருக்கு சமூக பாதுகாப்பு என்ற வேற ஒரு அர்த்தம் உண்டு. அர்த்தமற்ற புதிய பென்சன் திட்டத்தை கொண்டு வந்து பல லட்சம் ஊழியர்களை சமூக பாதுகாப்பற்றவர்களாக மாற்றியது. பாஜக மற்றும் அதிமுக அரசுகள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்மோடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும், பழைய பென்சன் திட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று 10 ஆண்டுகளாக தொடர்ந்து போராடி வருகின்றனர்.

2011-ம் ஆண்டுக்கு முன்பாக மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை கொண்டு வருவேன் என்று தேர்தல் வாக்குறுதி அளித்தார்கள். ஆட்சிக்கு வந்த உடன் அது தொடர்பாக பரிசீலனை செய்ய குழு ஒன்றையும் அமைத்தார்கள். அந்த குழு நீண்ட ஆண்டுகளாக தூங்கிக்கொண்டே இருந்தது. தூக்கத்தை களைத்து எழுப்பிய பிறகும் அது வேலை செய்ய வில்லை. அடுத்து 2016-ம் ஆண்டில் சட்டமன்ற தேர்தல் வந்தது. மீண்டும் அதே வாக்குறுதி, ஏமாற்றம் என்று அரசு ஊழியர்களின் போராட்டம் தொடர்ந்து வருகிறது.

மத்திய அரசின் கைப்பாவையாக அதிமுக செயல்படுவதால் மாநில அரசினுடைய உரிமைகளை ஒவ்வொன்றாக அதிமுக அரசு விட்டுக் கொடுப் பதாலும், அரசு ஊழியர்கள் மத்தியில் அதிமுக அரசின் நம்பகத் தன்மை கேள்விக்குறியாகி உள்ளது. அதிமுக அரசை இனி நம்புவதால் எந்த பயனும் இல்லை என்று 2021 ஜனவரி 21-ல் தொடர் போராட்டங்களை செய்து அரசு செவிசாய்க்காத நிலையில் அரசு ஊழியர்கள், இந்த நிலைப்பாட்டை எடுத்தனர். அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மட்டும் சுமார் 10 லட்சம் பேர் பணி புரிகின்றனர். இதில் ஒவ்வொரு குடும்பத்திலும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் என்ற வகையிலும் அவர்களது வாக்கு என்பது சுமார் 50 லட்சம் ஆகும். 50 லட்சம் என்ற எண்ணிக்கை என்பது ஒட்டு மொத்த வாக்காளர்களில் 10 சதவீதமாகும். இந்த 10 சதவீதமான வாக்குதான் அதிமுக அரசுக்கு எதிராக திமுக கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பை அதிகரித்துள்ளது. இதில் கூடுதலாக 2019-ம் ஆண்டு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராடுகின்ற போது அவர்களுடைய போராட்டத்தை கொச்சைப்படுத்தி அவர்கள் வாங்குகின்ற சம்பளத்தையும், அவர்களது பணியையும் கொச்சைப்படுத்தி பேசியது தமிழக வரலாற்றில் எந்த முதலமைச்சரும் செய்யாத ஒன்று. அதன் காரணமாக அவர்கள் கடுமையான கோபத்தில் உள்ளனர். பொது வாக அதிமுக அரசு தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரானது என்றும், அவர்களின் நியாயமான கோரிக்கைகளை தீர்ப்பதற்கு பதிலாக காலம் தாழ்த்தும் போக்கு கொண்ட குணம் கொண்டதாகும்.

சமூக பாதுகாப்பான பென்சன் திட்டத்தை அரசு ஊழியர்களுக்கு மட்டுமல்ல, தனியார் துறைகள் உட்பட அனைத்து துறைகளில் உள்ள ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்பதே நமது கோரிக்கையாகும். ஐரோப்பா, அமெரிக்கா உட்பட வளர்ந்த நாடுகளில் பென்சன் என்பது 100 சதம் அனைத்து மக்களுக்கும், தொழிலாளிகளுக்கும் உண்டு.

அங்கு பென்சன், மருத்துவம், 12-ம் வகுப்பு வரை கல்வி என்பது இலவசமாக அரசு அளிக்கிறது. இந்த மூன்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் என்று அழைக்கப் படுகிறது.

அதே போல 100 சதவீதமான மக்களுக்கு பென்சன் வழங்குவதில் நமக்கு முழு ஆதரவு உண்டு. ஆனால் மத்திய, மாநில அரசுகள் அதை செய்யாமல் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளை உயர்த்துவதிலும், பென்சன் கொடுப்பதிலும் மட்டுமே அக்கறை காட்டியது மற்றவர்களை வஞ்சித்ததை ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

எனவே தான் அரசு ஊழியர்கள், ஆட்சியாளர் களின் இந்த நடவடிக்கைக்கு எதிராக தொடர்ந்து போராடி வருகின்றனர். சமூகத்தில் ஏற்றத்தாழ்வு நிலவி வருகின்ற இந்த நிலையில் கல்வியை வியாபாரமாக்கி விட்டு, பட்டம் பெற்ற இளைஞர்களை பக்கோடா விற்கச் சொல்லும் இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக ஒரு விரல் புரட்சி மூலம் மாற்றத்தை ஏற்படுத்த முடிவு எடுத்து விட்டனர் அரசு ஊழியர்கள் மற்றும் தமிழக மக்கள்.

முதலாளித்துவ கட்டமைப்பில் குறைந்தபட்ச சமூக பாதுகாப்பு கூட இல்லாமல் இருப்பது நமது சமூக அமைப்பு சமநிலையுடன் வாழ்வதற்கான சூழலாக இல்லை என்பதை காட்டுகின்றது. அமைதியற்ற இந்த சூழலில் குறைந்தபட்ச சமூக பாதுகாப்பு, அரசு பள்ளிகள் பாதுகாப்பு, விவசாயிகளைப் பாதுகாப்பது, வறுமை ஒழிப்பு, புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்குதல் போன்ற அடிப்படை கடமைகளை நிறைவேற்றாத அரசுகள் மீது மக்கள் கோபங்கொண்டுள்ளனர். அதன் வெளிப்பாடு தேர்தல் முடிவுகளாக வெளிவரும். தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகளை அளிப்பவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அதையெல்லாம் காலந்தாழ்த்தினால் மக்கள் மறந்து விடுவார்கள் என்று கடந்த காலங்களைப் போன்று ஆட்சியாளர்கள் நினைத்தால் தொழிலாளி வர்க்கமும், விவசாயிகளும் ஒன்றிணைந்து தக்க பாடம் புகட்டுவார்கள்.

விழித்திருப்போம்!
வென்று காட்டுவோம்!!



**வாழ்க மணமக்கள்**

எம். வேலுச்சாமி, எல்.ஐ., நாகலாபுரம்,
தூத்துக்குடி மின் வட்டக்கிளை
அவர்களின் மகன்

**வி. விஜய் - எம். விநோதினி**

இருவரின் திருமணம் 24.3.2021 அன்று நடைபெற்ற போது மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 1000/- அளித்தார். **மணமக்களுக்கு வாழ்த்துக்கள்**




**தேர்தல் பணியில் மின்ஊழியர்கள்**

## கொரானா தொற்று நோய் காலத்தில் பணிக்கு வராதவர்களுக்கு அரசு உத்திரவின் தொடர்ச்சியாக விடுப்பு அனுமதிக்க வகை செய்யும் வழிகாட்டும் மின்வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION & DISTRIBUTION CORPORATION LIMITED**

(A B S T R A C T)

COVID 19 TNEB Limited and entities Period of absence - Regularization - Orders - Issued.

**( SECRETARIAT BRANCH )**

**(Per.) CMD TANGEDCO Proceedings No.32 dated: 11.02.2021**

Thai : 29, Saarvari Varudam,
Thiruvalluvar Aandu 2052.

**READ:-**

i) G.o.(Ms.) No.152 Health & Family welfare (P1) Department dated 23.3.2020.

ii) G.o. (Ms) No.304 Revenue & Disaster Management(DM-Il) Department, dated:17.06.2020.

**PROCEEDINGS:-**

In the Government orders first read a bove among others, notification were issued by the Health & Family Welfare (P1) Department, Government of Tamil Nadu, exempting Electricity Boards from Epidemic 1897) due Corona Virus Disease (Covid-19).

2. In the orders second read above, order were issued by the Revenue & Disaster Management Department, for regulating the period of atsence of Government employees during lock down period.

3) Representations have been received from Trade Unions for implementing the orders issued in second read above in toto for the employees of TNEB Limited and its entities.

4) The request for implementing the orders issued in the Government orders second read above has been examined in accordance with the notifications issued in the Government orders first read above, in TNEB Limited and its entities. Accordingly, it has been resolved to partially implement the orders issued in the Government orders second read above to the following categories of officials employees o f TNEB Limited and its entities:

(a) if the officials /employees him self is Covid Positive and under treatment (or) if his / her family members are affected with Covid and if he/she is quarantained (or) if their residence is in the containment zone requiring quarantine due to Covid-l9, the entire period of treatment quarantine as certified by appropriate Medical authorities be treated as Special Casual Leavel

(b) in respect of Differently abled employees, the welfare of Differenily Abled Persons Department issued various orders from time to time exempting the differently- abled persons from attending duty for each lock-down. The period of absence of such officials employees may be treated as duty during the period from 24.03.2020 to 31.07.2O20

(c) the pregnant women officials /employees are exempted and the period of their absence be treated as duty during the period from 25.03.2020 to 17.05.2020

(d) the officials/employees who are aged 55 years and above with co-morbidities, upon production of medical certificate, the period of absence be treated as duty duiing the period from 25.03.2020 to 17.05.2020.

5) The period of leave if any, already sanctioned for the aforesaid category of officialsl/ employees during the lockdbwn period, shall also be regularized as ordered in Para.4 above.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**M.BHAVANI,**
**SECRETARY**

**மாநகரத்தில் செயல்படும் மின் அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பயணப்படியை வகை செய்தும், வரையறுப்பதோடு காணொலி காட்சி மூலம் ஆலோசனை செய்வதற்கான கூட்டங்களை நடத்த வாரியம் பிறப்பித்த வாரிய உத்திரவு**

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

SECRETARIAT BRANCH
144, ANNA SALAI
Chennai - 600 002.

**Memo No. 6695/A18/A181/2021-1. dated the 17th March. 2021**

Sub : Establishment - Allowing Travelling Allowance & Daily Allowance to the officials performing Tours in Corporation areas - 25o/o Cul on the Daily Allowance in the Travelling Allowance bills Clarification - Issued.

Ref : 1. From the Government, Energy (82) Department, Letter No.2564l 82 I 2020-1, dated 14.09.2020.
2. Memorandum N0.39105/A1B/A181/18-5 (SB), dt. 22.L2.2020.
3. Audit Branch's U.O.Note No.4073l121ft1F331202L, dt.09.02.2021.

While clarifying certain points on allowing Travelling Allowance to the officials performing tours within the Corporation limits, the Government in its letter first cited, had mentioned the following cost control measures imposed by the Government in view of the huge shortfall in the receipts due to COVID 19 Pandemic and the consequent measures to contain the pandemic [as per G.O. (Ms) No.249, Finance (BG1) Dept., dated 21.05.20201:

i. The permission for official travel should be given judiciously and restricted only to absolutely essential official requirements and regular review meetings can be organized through Video Conferencing and tele-conferencing in a secure environment;

ii. The permissible rates of Daily Allowance shall be reduced by 25o/o. Only 75o/o of eligible amount shall be allowed to be drawn subject to rounding off to next 10 rupees for all categories of officials/nonofflcials.

A copy of the said Government's letter had been communicated to all the Chief Engineers/ Superintending Engineers for adherence - vide Memo. second cited.

2. Now, clarifications have been sought for by certain offices in connection with the date of implementation of the said orders in TANGEDCO and the quantum of Daily Allowance admlssible in the event of stay by the officials in Hotels/Guest Houses. The issue has been examined in detail and the following clarifications are issued:

i. The orders issued in Memo, second cited, have come into effect from 22.12.2020, i.e. the date of issue of orders in TANGEDCO; and

ii. As far as the admissibility of Daily Allowance to the officials in the event of their stay in Hotels / Guest Houses is concerned, the entire quantum of Lodging charges (according to the eligibility) may be sanctioned without any restriction,

3. The receipt of t he Memorandum shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**M.BHAVANI,**
**SECRETARY**




## தென் சென்னை 2 கிளையின் சார்பில் கேங்மேன் சிறப்பு பேரவை






20.03.2021 அன்று திருவண்ணாமலையில் கேங்மேன் சிறப்பு பேரவை கூட்டம் நடைபெற்றது. இந்த பேரவை கூட்டத்தில் மாநிலத் தலைவர் தி.ஜெய்சங்கர் அவர்களும் மாநில துணை பொதுச் செயலாளர் டி.பழனிவேல் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். வட்டத் தலைவர் கே.காங்கேயன் தலைமை தாங்கினார். வட்ட பொருளாளர் வி.எம்.வெங்கடேசன் முன்னிலை வகித்தார் கேங்மேன் வினோத் வரவேற்றார் வட்ட செயலாளர் மு.பாலாஜி தொடக்க உரையாற்றினார். பாதுகாப்பு விதிமுறைகள் குறித்து Er.அசோக் குமார் அவர்களும் மன அழுத்த மேலாண்மை குறித்து அரிகிருஷ்ணன் அவர்களும் பயிற்சி அளித்தனர். மேலும் வட்ட நிர்வாகிகள் ஆ.குருதேவன் து.அருள்தாஸ் அ.செந்தில்குமார் ஏ.ஜானகிராமன் சேஷாத்ரி பரமசிவம் ரமேஷ் ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். குறிப்பாக மன அழுத்த மேலாண்மை பயிற்சி கேங்மேன்களுக்கு வாழ்நாளில் மறக்கமுடியாத மிகச்சிறப்பான பயிற்சியாக அமைந்தது.

# மின்வாரிய கள உதவியாளர் பணிக்கு மத்திய அமைப்பின் சார்பில் மாநிலம் முழுவதும் கம்பம் ஏறும் பயிற்சி



Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 05.04.2021




Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian